# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, மே 17 2019. இதழ் - 64









**விவேகியே உண்மையான வீரன்! தெருச்சண்டியன் எல்லாம் தமிழனாக மாட்டான்!**

பக்கம் - 03



**கிழக்கின் மாற்றுத் தலைமையாக பிள்ளையான்?**

19.04.2019ம் திகதிய 60 வது அரங்கம் பத்திரிகையில்


பக்கம் - 11



**எறியப்படும் காலணியைப் பார்த்து புன்னகைத்தல்**

கிரிக்கெட்டில் எனக்கு அத்தனை ஆர்வமில்லை.

பக்கம் -12



**இப்படியும் ஒரு காலம் நிலவியது**

1949 களில் அதாவது 70ன் வருடங்களுக்கு முன்னர்

பக்கம் - 08



## ‘ஊடகத்துறைக்கு மீண்டும் ஆபத்து’

### - பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு-

--- நி.அமிர்தஸன் ---

இலங்கையில மீண்டும் ஊடகத்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு அச்சம் வெளியிட்டுள்ளது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுடன் தொடர்புள்ள சந்தேகநபராகத் திகழ்ந்த இலங்கைப் புலனாய்வுத் துறை அதிகாரியான பிரபாத் புலத்வட்டே மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இது ஆபத்தான நிலைமை என்றும் அந்தக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த அதிகாரி இலங்கை இராணுவப் புலானாய்வுச் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளதை இராணுவத் தளபதி மகேஸ் சேனநாய்க்கா உள்ளுர் தொலைக்காட்சி நேர்காணலில் உறுதிப்படுத்தியுள்ளாரெனவும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஆங்கிலப் பத்திரிகையாளரும் அரசியல் பத்தி எழுத்தாளருமான கீத் நொயர், பத்திரிகை ஆசிரியர் உபாலி தென்னக்கோன் ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பாக பிரபாத் புலத்வட்டே உட்பட ஐந்து புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். பிரபாத் புலத்வட்டே மற்றுமொரு ஆங்கிலப் பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடனும்

தொடர்ச்சி... (பக்கம் -15)

## ‘கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் இருந்து முஸ்லீம் ஆசிரியர்கள் இடமாற்றம் -- தமிழ் மாணவர்களின் கல்வி பாதிப்பு’

### --- கிழக்கு ஆளுநருக்கு எஸ் வியாழேந்திரன் எம்.பி எச்சரிக்கை



கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்பித்துவரும் முஸ்லீம் ஆசிரியர்களை கிழக்கு ஆளுநர் உடனடியாக இடம்மாற்றிவருவதால் தமிழ் பிள்ளைகளுடைய கல்வி பாதிக்கப்படுகிறது என்றும் இதனால் கிழக்கில் தமிழ் கல்வி வலயங்கள் பாடசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் பெற்றோர்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலைவரும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் பாடசாலைகளில் முஸ்லீம் ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பாக புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், ‘கிழக்கு மாகாண ஆளுநர் ஏ எல் எம். ஹிஸ்புல்லா தீவிர நடவடிக்கையாக கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற முஸ்லீம் ஆசிரியர்களை உடனடியாக எதிர்வரும் யூன் மாதம் வரைக்கும் முஸ்லீம் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்துவருகின்றார். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா மண்முனை மேற்று என நான்கு தமிழ் கல்விவலயங்கள் இருக்கின்றன. இந்தக் கல்வி வலயங்களில் மாகாணப் பாடசாலைகள், தேசியப் பாடசாலைகள் அடங்கலாக 252 முஸ்லீம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். இதில் கடந்த மூன்று நான்கு தினங்களில் 120 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று முஸ்லீம் பாடசாலைகளுக்கு சென்றுள்ளனர்.

பட்டிருப்பு வலயத்திலே 123 ஆசிரியர் பற்றாக்குறையுள்ளதுடன் 61 முஸ்லீம் ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். இதில் 18 முஸ்லீம் ஆசிரியர்கள் இடமாறிச் சென்றுள்ளனர். ஏனையவர்களும் போகவுள்ளனர் கல்விசாரா ஊழியர்கள் 12 பேர் அவர்களும் போவதற்கு அனுமதி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறே மட்டக்களப்பு வலயத்தில் 32 முஸ்லீம் ஆசிரியர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதில் வின்சன்ட் மகளீர் தேசிய பாடசாலை சிவானந்தா தேசிய பாடசாலை. சிசீலியா மகளீர் தேசிய பாடசாலை ஆகியவற்றில் இருந்து 9 ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர் கல்குடா வலயத்தில் 380 ஆசிரியர்களுக்கு பற்றபக்குறை உள்ளது. இதில் முஸ்லீம் ஆசிரியர்கள் 152. அதில் 71 ஆசிரியர்கள் வெளியேறியுள்ளனர். மண்முனை மேற்குவலயம் 216 ஆசிரியர் பற்றாக்குறை. 22 முஸ்லீம் ஆசிரியர்கள். அவர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -02)



# கிழக்கு இந்துக்குருமார் ஒன்றியம் பௌத்ததேரருடன் சந்திப்பு!



(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தினர் கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரருடன் சிநேகபூர்வ நல்லிணக்கசந்திப்பொன்றை நடாத்தினர். இச்சந்திப்பு கல்முனை சுபத்ராராமய விகாரையில் நடைபெற்றது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்தக்குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ.அ.கு. இலிகிதராஜக்குருக்கள், பொருளாளர் சிவஸ்ரீ ச.கு.உதயகுமாரக்குருக்கள், உபதலைவர் சிவஸ்ரீ ந.கு. முரசொலிமாறக்குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நல்லிணக்கச்சந்திப்பின் இணைப்பாளரான ததே.கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனும் கலந்துகொண்டார். நாட்டின் சமகால அசாதாரணசூழ்நிலை மக்களின் பாதுகாப்பு கல்முனை தமிழ்ப்பிரதேசசெயலக விவகாரம் என்பன குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

தொடர்ச்சி...

## 'கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் இருந்து முஸ்லீம் ஆசிரியர்கள் இடமாற்றம் ...

அனைவரும் வெளியேறியுள்ளனர் கா.பொ.த. உயர்தரப்பரீட்சை மற்றும் 5 ம் ஆண்டு புலமைப்பரீட்சை ஓகஸ்டில் இடம்பெறவுள்ளதுடன் குண்டு தாக்குதலையடுத்து மே மாதம் நடுப்பகுதியில் பாடசாலை தொடங்கிய போதும் மாணவர்கள் வரவு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேவேளை யூலை மாதம் 2 ம் தவணைச் சோதனை நடக்கவுள்ளது. இவ்வாறு தமிழ் மாணவர்களின் முக்கியமான பரீட்சைகள் இருக்கத்தக்கதாக அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியில்லாமல் ஆளுநரின் உத்தரவுக்கு அமைய மாகாணப் பணிப்பாளர் உடனடியாக இடமாற்றம் செய்கின்றார். எந்தக் கவலை, பொறுப்புணர்வு இல்லாமல் கிழக்கு மாகாண ஆளுநர் இனரீதியாகச் செயற்படுகின்றார். இதை நாங்கள் செய்தால் இனவாதி அவர் செய்தால் இனவாதியல்ல?

கடந்த காலங்களில் தமிழ் வலயங்களில் இருந்த ஆசிரியர் வெற்றிடங்களைக் காட்டி முஸ்லீம் ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்க, அவர்கள் சிறிது காலத்தின் பின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுடைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்றனர். ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர் நாட்டில் சுமூகமான நிலை தோற்று விக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டில் பிரச்சினையில்லை எனவும் தெரிவிக்கும் போது கிழக்கு மாகாண ஆளுநர் ஏன் திடீரென அவசர அவசரமாக தமிழ் பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்களை இடமாற்றுகின்றார். அதேவேளை கடந்த 3 தசாப்தங்களாக யுத்ததினால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தன்னுடைய இனத்தை மட்டும் சிந்தித்து செயற்படுகின்ற கிழக்கு ஆளுநர் உடனடியாக வெளியேறிய முஸ்லீம் ஆசிரியர்களுக்கு சமனாக தமிழ் ஆசிரியர்களை நியமிக்கப்படவேண்டும்.

அதேநேரம் முஸ்லீம் பாடசாலையில் கற்பிக்கின்ற தமிழ் ஆசிரியர்கள் விடுவிக்கப்படவேண்டும். அதில் வெற்றிடமாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு தமிழ் வேலையற்ற பட்டதாரிகள் உடன் நியமிக்கப்படவேண்டும் . 'என்று கூறியுள்ளார்.

# ரிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 64 பேரால் கையெழுத்திடப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனை ஊடகங்களுக்கு கூறியுள்ளார். இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டு எதிரணியின் மஹிந்த ராஜபக்ச பிரிவு முடிவெடுத்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்திய தீவிரவாதிகளுக்கு அரசியல் ஆதரவு வழங்கியதாக இந்த மனுவில் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

# சீகிரியவை இலவசமாகப் பார்க்கலாம்

சீகிரியா தொல்பொருள் மற்றும் அருங்காட்சியக வளவை இம்மாதம் 18ஆம் 19ஆம் 20ஆம் திகதிகளில் உள்ளூர் சுற்றுலா பயணிகளுக்கு இலவசமாக பார்வை இடுவதற்கான வசதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய கலாச்சார நிதியம் தெரிவித்துள்ளது.

வெசாக் நோன்மதித் தினம் மற்றும் தேசிய தொல்பொருள் மற்றும் அருங்காட்சியக தினத்துக்கு அமைவாக இந்த ஏற்பாடு செய்யப்படுள்ளது.

சீகிரியா பகுதிக்கு செல்லும் பொழுது காணப்படும் தொல்பொருள் கண்காட்சி மற்றும் கல்வி வேலைத்திட்டங்கள் பல இந்த 3 நாட்களிலும் மேற்கொள்ளப்படுவதாக கலாச்சார நிதியத்தின் சீகிரியா திட்ட முகாமையாளர் மேஜர் அநுர நிசாந்த தெரிவித்துள்ளார்.

சீகிரியாவின் தொல்பொருள் மற்றும் அருங்காட்சியக வளவுக்கான பாதுகாப்புக்கு இராணுவம் ஈடுபடுத்தப்படும் என்றும் சீகிரியாதிட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

# மண்முனைப் பற்றுப் பிரதேச சபையில் பாதுகாப்புக் கருதி பல்வேறு தீர்மானங்கள்



நாட்டில் நிலவும் அமைதியற்ற நிலைமை காரணமாக முஸ்லீம் வியாபாரிகளின் பாதுகாப்பைக் காரணம் காண்பித்து, ஆரையம்பதி பிரதேசத்தில் முஸ்லீம் வியாபாரிகளின் வியாபார நிலையங்களை தற்காலிகமாக தடை செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மண்முனைப் பற்றுப் பிரதேச சபையின் 14வது அமர்வு பிரதேச சபைத் தவிசாளர் சோ.மகேந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பிரதேசத்தின் பாதுகாப்பு விடயங்களைக் கருத்திற் கொண்டும் இனமுறுகலைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சபை ஆரம்பத்தின் போது குறித்த தீர்மானங்கள் தொடர்பில் அதிருப்தி தெரிவித்து சபையின் முஸ்லீம் உறுப்பினர்கள் ஐவர் வெளிநடப்புச் செய்தனர். சபையின் கோரம் போதுமானதாக இருந்த காரணத்தினால் சபை தொடர்ந்தது.

இதன்போது மண்முனைப் பற்றுப் பிரதேசத்தில் எல்லைப் புறப் பிரதேசங்களில் மக்கள் வசிக்காமல் வெறுமையாகக் காணப்படும் காணிகளின் வேலிகள் தகரங்களால் பூரணமாக மறைக்கப்படுவது நீக்கப்பட்டு, வேலிகள் அமைத்து, வீதியில் செல்பவர்களுக்கு காணியின் நிலை தெரியும் வகையில் அமைய வேண்டும் என்ற பிரேரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சா.நகுலேஸ்வரன் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

அத்துடன் பாதுகாப்புக் கருதி வீதியோர வியாபாரிகளின் வியாபாரங்களைத் தற்காலிகமாகத் தடை செய்வது தொடர்பிலும் அவரால் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் பொன்.குணசேகரம் அவர்களினால் "பாதுகாப்பு கருதியும் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரையிலும் ஆரையம்பதி பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் முஸ்லீம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களைத் தற்காலிகமாகத் தடை செய்வதற்கான" பிரேரணையும் கொண்டுவரப்பட்டது.

மேற்படி வெளிநடப்புச் செய்த 05 முஸ்லீம் உறுப்பினர்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து உறுப்பினர்களினால் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக இப்பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் டெங்கு அபாயம் !

தற்பொழுது நிலவும் காலநிலைக்கு மத்தியில் பல மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

இந்த நிலைமையை கருத்திற் கொண்டு டெங்கு நோய் பரவுவதை தடுக்கும் நோக்கில் விஷேட வேலைத்திட்டம் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

15 மாவட்டங்களில் 70 சுகாதார அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கியவகையில் இது மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி செயலக பணியகம் மற்றும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு ஆகியன இதை மேற்கொண்டிருந்தன.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய பெரும்பாலான குடம்பிகள் யாழ்ப்பாணம், குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளன. பாடசாலைகளிலும், மத வழிபாட்டு இடங்களிலும், தொழிற்சாலை மற்றும் கட்டிட நிர்மாண பகுதிகளிலும் டெங்கு குடம்பிகள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

தற்போதைய காலநிலையின் காரணமாக நுளம்புகள் பரவக்கூடிய நிலை காணப்படுகிறது. இதனால் வாரத்தில் 30 நிமிடங்களில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சுற்றாடல் பகுதிகளை சுத்தம் செய்வதில் பொது மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

கடும் காய்ச்சல், தலை வலி, வாந்தி, சருமத்தில் சிவப்பு நிறத்திலான தழும்புகள் காணப்படும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று தேவையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என பொது மக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# வெசாக் தினத்தை முன்னிட்டு 762 கைதிகள் விடுதலையாவர்

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 762 கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வெசாக் தினத்தன்று இந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தேசிய நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது. ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட 26 பெண் கைதிகளும் இதில் அடங்குவர். 30 சிறைகளைச் சேர்ந்த கைதிகள் அங்கு விடுதலை செய்யப்படுவார்கள். சிறுகுற்றங்களைச் செய்தவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இருந்தபோதிலும் பாலியல் வல்லுறவு, சிறார் துஷ்பிரயோகம் மற்றும் போதை மருந்துக் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது.

# விவேகியே உண்மையான வீரன்! தெருச்சண்டியன் எல்லாம் தமிழனாக மாட்டான்!




"காத்தான்குடி உங்களை வரவேற்கிறது" என்ற தலைப்பில் இரு வாரங்களுக்கு முன்னதாக நான் எழுதிய ஆசிரியர் குறிப்பை பலர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். முகநூலில் அதனைப் பார்த்த சிலர் வெளியில் அபிப்பிராயம் சொல்லப் பயந்து, உள்பெட்டியில் வந்து வாழ்த்தியுள்ளனர். ஆனால், இந்தக் குறிப்பு அவர்களுக்கானது அல்ல.

அந்தக் குறிப்புடன் சிலர் முரண்பட்டுள்ளனர். அவர்களுக்கானதுதான் இந்தக் குறிப்பு. அப்படி முரண்பட்டவர்களில் சிலர் உண்மையில் நான் அன்று கூறிய விடயங்களின் தாற்பரியத்தை தெரிந்தவர்கள். ஆனால், தமது குறுகிய சில அரசியல் நோக்கங்களுக்காக, லாபங்களுக்காக அதனை எதிர்ப்பவர்கள். நடிப்பவர்கள். அவர்களைப் பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால், பொதுமக்கள் அவர்கள் மீது கவனமாக இருக்க வேண்டும்.

ஆனால், உண்மையிலேயே அந்தக் குறிப்பைப் பார்த்து சிலர் நான் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் எழுதியதாக நினைத்திருப்பதனையும் நான் அறிகிறேன். இந்தக் குறிப்பு அவர்களுக்கானதுதான்.

முதலில் நான் மீண்டும் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன். நான் எனது நிலைப்பாட்டில் இருந்து கொஞ்சம் கூடப் பின்வாங்கவில்லை. பின்வாங்கப் போவதுமில்லை. எல்லோரும் ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது எனது கடந்த கட்டுரையில் நான் "சண்டை போடாதீர்கள்" என்றுதான் எழுதியிருந்தேன். "சண்டையைப் போடுங்கள்" என்று எழுதவில்லை. ஆகவே நான் என்னுடைய நிலைப்பாட்டிலே இருந்து பின்வாங்கவேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

இலங்கை உள்நாட்டுப் போரின் போதும் இதேபோன்ற ஒரு நிலையை நான் எதிர்கொண்டுள்ளேன். கொழும்பில் நான் இருந்து "சண்டை போடாதீர்கள்", "போர் வேண்டாம்" என்று சொன்னபோது. இங்கு நான் தேசத்துரோகியாக ஊடகங்களில் பேர் சொல்லி அறிக்கையிடப்பட்டேன். அந்த நிலை, குற்றச்சாட்டு அத்தோடு முடிந்துவிடவில்லை. நான் இங்கிருந்து லண்டனுக்கு ஓடும் நிலை ஏற்பட்டது. அதனை அடுத்து லண்டனில் இருந்து எழுதும் போதும், நான் துரோகியாக்கப்பட்டேன். அங்கு நான் அறிவிக்கப்பட்டது "தமிழ் துரோகி"யாக. மொத்தத்தில் நான் அன்று சொன்னது போர் வேண்டாம் என்றே. அது போரில் ஈடுபட்ட இரு தரப்புக்கும் பிடிக்கவில்லை. இரு தரப்பும் என்னைத் துரோகி என்றன. ஆனால், இறுதியில் என்ன நடந்தது. ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் எமது மக்கள் கொல்லப்பட்டார்கள் என்று இன்று புலம்பிக்கொண்டிருக்கிறோம்.

எனக்கும் துரோகிப்பட்டம் என்பது பழகிப்போய் விட்டது. எனக்கு இப்போது இதெல்லாம் ஏதோ "எருமை மாட்டின் முதுகில் மழை பெய்வது போல" ஆகிவிட்டது. இதில் என்ன பிரச்சினை என்றால் அன்று போருக்கு அழைத்த "பெருவீரர்கள்" எல்லாம் எனக்கு பின்னால் துரோகியாக்கப்பட்டார்கள். துரோகிப் பட்டம் பெற்றதில் நான் அவர்களைவிட சீனியர். அது நிற்க.

மீண்டும் விடயத்துக்கு வருகிறேன். இப்போதும் நான் சொல்வது எங்களுக்குள் சிக்கல்கள் வேண்டாம் என்றுதான்.

நான் முஸ்லிம்களுக்கு ஆதரவாக அன்றைய கட்டுரையை எழுதினேனா என்றால், ஆம் நான் அப்படித்தான் எழுதினேன். அது உண்மைதான். ஆனால், அந்த நலனில் எமது சொந்த நலனும் இருக்கிறது என்பதை தமிழர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

பாதுகாப்புக் கெடுபிடிகளை பார்க்காத சமூகம் அல்ல தமிழ்ச் சமூகம். அந்த அவலங்கள் எமது எதிரிக்கும் வரக்கூடாது என்பதை அதனை அனுபவித்தவர்கள் உணர்வார்கள். அதனைத்தான் நான் எனது கட்டுரையில் சொன்னேன்.

அடுத்தவிடயம் எமக்கும்(தமிழர்களுக்கும்) முஸ்லிம் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கிறதா என்றால் உண்டு என்றுதான் நானும் சொல்கிறேன். இங்கு எனக்கு எதிராக மறைந்து நின்று கல்லெறியும் பலருக்கு ஒரு விடயத்தை நான் சொல்லியாக வேண்டும். நீங்கள் எல்லாம் முஸ்லிம்களின் தவறான தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் பயந்து, முகம் காட்டாமல் அடக்கி வாசித்துக்கொண்டிருந்த காலத்தில், லண்டனில் இருந்து மட்டக்களப்பில் வந்து நின்று, நேரக்கு நேராக, அம்பாறை மாவட்டத் தமிழர் நிலை குறித்தும், ஆளுநர் நியமனம் குறித்து வெளிப்படையாகவே எழுதியது அரங்கம் பத்திரிகைதான். அம்பாறை பற்றி எமது அரங்கத்தில் தொடர்ச்சியாக ஆதாரங்களுடன் வந்த கட்டுரைகளை எல்லோரும் மறந்துவிட்டார்கள் போலும். சில உள்ளூராட்சிகளின் மிரட்டலுக்கு பயந்து சில பத்திரிகைகள் மன்னிப்பு கோரி, தப்பிய போதும், விடாப்பிடியாக எதிர்த்து நின்றவர்கள் நாம்.

ஆனால், எனது ஊரவன் எந்த மதமாக, இனமாக இருந்தாலும் அவனுக்கு பிரச்சினை என்று வரும்போது அவர்களுக்கு நாம் அனுசரணையாக நிற்க வேண்டும் என்பதிலும் நாம் விடாப்பிடியாகவே நிற்போம். எம்முடைய பிரச்சினையை நாம் பேசித்தீர்ப்போம், ஆனால், எம்மவருக்கு நாம் உறுதுணையாக நிற்போம்.

**சீவகன் பூபாலரட்ணம்**

எமக்கு இப்படியான பிரச்சினை வந்தபோது எமக்கு அவர்கள் உதவ வரவில்லையே என்று சிலர் கேட்கலாம், அவர்கள் உதவிக்கு வரவில்லை என்பதையே உண்மையாகவும் எடுத்துக்கொள்வோம், அப்படியானால், அவர்கள் உதவிக்கு வராததை நாம் பிழை என்று கருதுகின்றோம் என்று பொருள், அப்படியானால், அதே பிழையை நாம் செய்யலாமா? இதுதான் தமிழர் பண்பா? அப்படியானால் என்னை எதிர்ப்பவர்



எல்லாம் யார்?

முஸ்லிம்கள் தமிழர்களைவிடப் பலமாக இருந்தபோது எம்மீது பலவிதமான ஆக்கிரமிப்புக்களை செய்ததாக அரங்கத்திலும் கட்டுரை வந்திருக்கின்றது. ஆகவே, அவர்கள் இக்கட்டில் இருக்கும் போது அவர்களை நாம் அழுத்த வேண்டும் என்பது சிலரது விருப்பம் போலும். அது அறம் அல்ல. ஆனால் ஒன்று செய்யலாம். அவர்கள் சிரமத்தில் இருக்கும் போது அவர்களை அணுகி அவர்களுக்கு உதவியாக, அனுசரணையாக இருந்தால் பின்னர் அதன் மூலம் எமது பிரச்சினையையும் பேசலாம்.

ஆனால், அவர்களது ஒரு இக்கட்டான நிலையை நாம் பயன்படுத்துவது மிகப்பெரும் தவறு. அடுத்தது எந்தக் குற்றத்துக்கும் காரணகர்த்தாவை மிகச் சரியாக அடையாளம் காண்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாமே எதிராளியைப் பலமாக்கி விடுவோம். அடுத்ததாக எமது குழந்தைகள், எமது அடுத்த தலைமுறை குறித்த கரிசனையும் முக்கிய இடம்பெறுகிறது. இலங்கையில் இருக்கும் தமிழ்ப் பெற்றோர் ஒருதடவை உங்கள்குழந்தைகளின் முகங்களைப் பாருங்கள். நாம் முப்பது வருடம் அனுபவித்த கஸ்டங்கள் நம் குழந்தைகளுக்கு தேவையா? எனது பிள்ளைகளை நான் ஓரளவு பாதுகாப்பான சூழ்நிலையில் வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன் இங்குள்ள ஏனையவர்களும் தங்கள் குழந்தைகளை அடுத்த தசாப்தத்தின் போரின், மோசமான நிலையின் இலக்காக மாற்றிவிடாதீர்கள்.

மட்டக்களப்பிலும், கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் இப்போது உள்ள பதின்ம வயதுச் சிறார்களை பார்த்திருக்கிறேன். 30 வருடங்களுக்கு முன்னர் நாம் இருந்த நிலையில் அவர்கள் இல்லை. மிகவும் மென்போக்கானவர்களாக, உலகை ரசிக்கப் பிறந்தவர்களாக மாத்திரமே அவர்கள் இருக்கிறார்கள். கடந்த 10 வருடங்களுக்கு முன்னதாக இங்கு, இந்த நாட்டில் என்ன நடந்தது என்பது பற்றி அவர்களுக்கு எந்தவிதமான தகவலும் சரியாகத் தெரியவில்லை. கடுமையான ஒரு காலத்தை எதிர்கொள்ளும் மனோநிலையில் அவர்கள் இல்லை. தமது நெஞ்சைத் தொட்டுப் பேசும் பெற்றோர் அனைவருக்கும் இது புரியும். அவர்களை மீண்டும் ஒரு போர் முனையில் கொண்டு சென்று நிறுத்த உங்களுக்கு விருப்பமா? அவசரகாலச் சட்டத்தின் தாற்பரியம் கூட அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் சொல்கிறேன் இங்கு தேவை ஒரு உண்மையான நல்லிணக்கம் என்று. ஒரு சிறு குழு தவறாக நடந்தாலே நாட்டில் அனைவரின் நிம்மதியும் கெட்டுவிடும் என்பதை அண்மைய நிகழ்வுகள் தெட்டத்தெளிவாகக் காண்பித்துள்ளன. அதனால்தான் சொல்கிறேன் அடுத்த எவருடனும் முரண்பாடு தேவையில்லை. நிதானமாகச் செயற்படுங்கள். யாரையும் பகைக்க வேண்டாம். யாரின் மீதும். ஒடுக்குதல் சிந்தனை வேண்டாம். அதேபோலவே முஸ்லிம்களோடும் சகவாழ்வுக்கு வழி செய்யுங்கள்.

உரிய பகையாளியை சரியாக அடையாளம் காணாமல் அனைவரையும் பகையாளியாக்கிக் கொள்ள வேண்டாம். உங்கள் பகையாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள வேண்டாம்.

ஒரு விவேகியே உண்மையான வீரனாக இருக்க முடியும். தெருச்சண்டியன் எல்லாம் வீரனாக முடியாது. ஒளிந்திருந்து கல்லெறிபவன், தனது படத்தை, அல்லது முகத்தைக் காண்பிக்காமல் ஒளிந்திருந்து கல்லெறிவது போல, மறைந்திருந்து கருத்துக் கூறுபவன் எல்லாம் வீரனாகமாட்டான். அவனெல்லாம் கோழைகள். ஒரு விவேகி சமாதானத்தை நிராகரிக்க மாட்டான். அடையாளம் தெரியாமல் கல்லெறிய மாட்டான். தன் எதிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள மாட்டான். என்மீது கல்லெறிபவர்களின் வார்த்தையில் கூறுவதானால் இவர்கள் எல்லாம் தமிழனாகவே இருக்க மாட்டான். சரி அது அவர்களுக்கு.

என்னைப் பொறுத்தவரை நான் மனிதனாக இருக்க முயல்கிறேன். அப்போதுதான் நான் பிறந்த நாட்டுக்கும் ஊருக்கும் என்னால் பெருமை சேர்க்க முடியும். அடுத்தவர்களையும் மனிதனாக இருக்க அழைக்கிறேன். அதுதான் மட்டக்களப்புக்கும், கிழக்கு மாகாணத்துக்கும், அவ்வளவு ஏன், இலங்கைத் திருநாட்டுக்கும் உதவும்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நம்பிக்கையில்லை உறுப்பினர்கள் பலர் கையொப்பமிடவில்லை

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது வெளிப்படையாகவே குற்றம் சுமத்தி வரும் சிங்கள இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய வியாழக்கிழமை அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. ஆனால் இந்தப் பிரேரணை வெற்றிபெறக் கூடிய வாய்ப்புகள் இல்லையென கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

**நி. அமிர்தசன்**

சரியான ஆதரங்களோடு பிரேரணை முன்வைக்கப் படவில்லையானால் அது வெற்றி பெறாதென்றும் அவ்வாறு வெற்றிபெறாத பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்பித்துப் பயனில்லையென்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச புதன்கிழமை இரவு இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பில் கூறியுள்ளார்.

## முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் கட்சித் தலைவர்கள்



இந்த நிலையில் 69 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளார். ஆனால் மகிந்த ராஜபக்ச கையொப்பமிடவில்லை. அவர் சார்ந்த கட்சி உறுப்பினர்கள் பலரும் கையொப்பமிட விரும்பவில்லை.



பிரேரணையில் பத்துக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் கூறியுள்ளார். இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்பக்கு விடப்படும்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் இல்லையெனக் கூறப்படுகின்றது.

## எதிர்கொள்ளத் தயார் என்கிறார் ரிசாத் பதியுதீன்

பிரேரணைக்கு ஆதரவாக ஜே.வி.பியும் இதுவரை கருத்துக் கூறவில்லை.



தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை கருத்துக்கள் எதனையும் கூவில்லை.

அதேவேளை பிரேரணையை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் சவால் விடுத்துள்ளார். முஸ்லிம் என்ற காரணத்தின் அடிப்படையில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தப் பிரேரணை குறித்து கருத்து வெளியிடவில்லை. இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதால் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அரசியல் செல்வாக்குத்தான் உயருமென முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவில்லை

---

# முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறை – மே 2019 எமது கூற்று

*--- சமாதானம், அகிம்சை மற்றும் சமத்துவத்திற்கான பெண்களின் அறிக்கை ---*

இலங்கையில் நீதி, சமத்துவம், அர்த்தமுள்ள சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்ட செயற்படுபவர்கள் நாங்கள். முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறை எமது தீவின் பல இடங்களிலும் வெடித்துள்ள நிலையில் இதனை எழுதுகிறோம்.

13.05.2019 அன்று பள்ளிவாசல்கள், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான கடைகள் வடமேல் மாகாணத்தின் சிலாபத்தில் வன்முறைக் கும்பலால் தாக்குதலுக்கு உள்ளாகின. புதனன்றும் (14.05.2019) வட மேல் மாகாணத்தில் உள்ள கினியாம, கொட்டம்பிட்டிய போன்ற பல இடங்களில் வன்முறை நிகழ்ந்ததை அறிகின்றோம். இவை இன்னும் தொடர்கின்றன.

தமிழருக்கு எதிரான வன்முறை நிகழ்ந்த, பலநுறு உயிர்களைப் பலிகொண்ட, 1983 கறுப்பு ஜூலை மாதத்தை எம்மில் பலர் முகம் கொடுத்து வாழ்ந்த அனுபவம் உடையவர்களாக உள்ளோம். பல ஆயிரம் உயிர்களைக் காவு கொண்ட உள்நாட்டுப் போர்க்கால கட்டத்திற்கு ஊடாக வாழ்ந்த கசப்பான அனுபவத்தை உடையவர்கள் நாங்கள், 2014 இல் அழுத்கமவிலும் கடந்த வருடம் திகணவிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை நிகழ்ந்தபோது நாங்கள் பயத்துடன் இருந்தோம். ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நிகழ்ந்த வன்முறையால் இறந்தவர்களையும், காயம் அடைந்தவர்களையும் சிதைந்த குடும்பங்களையும் பற்றி ஆறாத துயரம் கொண்டவர்களாக உள்ளோம்.

சகல மனிதாபிமானத்துக்குமான விண்ணப்பமாக இந்த விண்ணப்பத்தை நாங்கள் எழுதுகிறோம்.

சகல இலங்கைப் பிரஜைகளையும் தத்தமது பெறுமதி, நம்பிக்கை சமயம், மனிதாபிமானம் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள் என வேண்டுகிறோம். என்ன விலை கொடுத்தாவது வன்முறைக்கு எதிராகச் செயற்படுமாறு சகல இலங்கை பிரஜைகளையும் வற்புறுத்தி வேண்டுகின்றோம். ஒருமித்த அரசியல் தலைமைத்துவத்துடன் வன்முறையை உடனடியாக ஒழித்து, பொறுப்புடமை நியாயம் ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் என எமது பிரதிநிதிகளை வற்புறுத்துகின்றோம். நிறுத்த முடியாத ஒரு யுத்தத்தை நோக்கிய பாதையில் மீண்டும் அடி எடுத்து வைக்க மாட்டோம் என உறுதிபூணுமாறு சகலரையும் கேட்கிறோம்.

மேலும் மேலும் நிகழும் மரணங்களுக்காகத் துக்கம் அனுஷ்டிப்பதில் அர்த்தமில்லை. இவை நிகழ்ந்தபின் கூறுபவை வெற்றுரைகள் ஆகும். பாவத்திற்கு மன்னிப்பு கேட்கவோ உடந்தையாக இருந்தமைக்கு விளக்கம் அளிக்கவோ எம்மால் முடியாமற் போய்விடும். ஒரு தேசம் என்ற வகையில் இவ்வளவு கஸ்டங்களையும் அனுபவித்தும் இன்னுமொரு கறுப்பு ஜூலை நிகழ்வதைத்த தடுக்க முடியாவிட்டால் நாம் எதனைச் சாதித்தோம்?

எங்கள் கூட்டுப் பிராத்தனையில் எல்லா மக்களையும் குறிப்பாக இத் தருணத்தில் வலுவற்றவர்களாக உணரும் அனைவரையும் உள்ளடக்குகிறோம்.

நாங்கள் வன்முறையை எதிர்த்துச் செயற்படுவோம். வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்வோம்!.

---



# எந்த மாற்றமும் இன்றி ஊரடங்கு வேளையிலேயே வன்முறைகள் தொடருகின்றன



ஏப்ரல் 21 – ஈஸ்டர் தாக்குதல்களோடு நாடு மறுபடியும் யுத்தகால நெருக்கடியை ஒத்த நிலைக்குள்ளாகியுள்ளது. எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சம் சனங்களிடம் வந்திருக்கிறது என்றால் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகி விட்டது என்றே அர்த்தம். சனங்களிடம் மட்டுமல்ல, அரசிடமும்தான். என்பதால்தான் முப்படைகளுக்கும் முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதும் படையினர் நாடு முழுவதிலும் தெருவிலிறங்கியிருப்பதும் ஸ்திரமற்ற நிலையின் வெளிப்பாடே.

ஆகவே பாதுகாப்புச் செலவீனம் மீண்டும் அதிகரிக்கப்போகிறது. பதிலாக வருவாயில் படு வீழ்ச்சி ஏற்படவுள்ளது. ஏற்கனவே சுற்றுலாத்துறையும் முதலீட்டுத்துறையும் படுத்துவிட்டன என்ற துக்க அறிக்கையை பொருளாதாரத்துறையினர் விடுத்துள்ளனர். இனி ஏனைய வருவாய்களும் சடுதியாகப் படியிறங்கக் கூடும்.

இதனால் யாரும் மகிழக்கூடியதாக இன்றைய நிலைமைகளில்லை. பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அச்சமடையத்தேவையில்லை என்று அரசாங்கம் உறுதியளித்தாலும் அவ்வப்போது அதை மீறும் சம்பவங்கள் நடக்கின்றன. ஊரடங்கு வேளையிலேயே வன்முறைகள் நடக்கும் அளவுக்குத்தான்

## போர் முடிவுக்கு பின்னரான நல்லிணக்க முயற்சியின்மையே அனைத்துக்கும் காரணம்

நாட்டின் யதார்த்தமிருக்கிறது. அதுவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்ட சூழலிலேயே முஸ்லிம் மக்களின் மீதான திட்டமிட்ட வன்முறைகள் நடந்துள்ளன. இந்த வன்முறையாளர்கள் இன்னும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. வழமையைப்போல வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும் என்ற அறிவிப்பு மட்டும் வெளியாகியிருக்கிறது. இது இயலாமையின் வெளிப்பாடா அல்லது வழமையான அரசியல் சூழ்ச்சியா?

எப்படியிருந்தாலும் இது எந்த வகையிலும் நல்லதல்ல.

இவ்வாறான நிலைமைகளுக்கு அனைத்துத்தரப்பினருமே பொறுப்பு. குறிப்பாக அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கு இதில் கூடுதல் பொறுப்புண்டு.

ஏனென்றால் மக்களே தமது தலைவர்களையும் பிரதிநிதிகளையும் தெரிவு செய்கின்றனர். அப்படித் தெரிவு செய்யப்பட்டவர்களே நாட்டை ஆள்கின்றனர். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆக தங்களுடைய எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பை தாம் தெரிவு செய்தவர்களிடம் கொடுக்கின்றனர்.

ஆனால், அப்படித் தெரிவு செய்யப்பட்டவர்கள், மக்களுடைய ஆணைக்கு ஏற்பச் செயற்படுகிறார்களா? நாட்டின் எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திக்கிறார்களா? சனங்களுக்கு விசுவாசமாக இருக்கிறார்களா? நாட்டுக்குத் தேவையானது என்னவென்று சிந்திக்கிறார்களா? அப்படிச் சிந்தித்தவற்றைச் செயற்படுத்துகிறார்களா? என்றால் நிச்சயமாக இல்லை என்றே தெளிவாகத் தெரியும்.

இதில் தமிழ், முஸ்லிம், மலையக, சிங்களக் கட்சிகள், தலைமைகள் எல்லாம் அடக்கம். அவ்வாறே இந்தக் கட்சிகளையும் தலைமைகளையும் அங்கீகரித்துள்ள தமிழ், முஸ்லிம், மலையக, சிங்களச் சமூகத்தினரும் அடங்குவர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட எவரும் நாட்டைக் குறித்தும் தமது சமூகங்களைக் குறித்தும் விசுவாசமான உணர்வோடுமில்லை. சமூக, வரலாற்று அறிவோடுமில்லை. பதிலாக முழுச் சுயநலமிகளாகவே உள்ளனர். இதற்காகவே இவர்கள் சமூகங்களைப் பிரித்து இனவாத உணர்வூட்டி அவற்றைப் பிரிநிலையில் – பகை நிலையில் வைத்திருக்கின்றனர். இந்தப் பகை நாட்டுக்கும் சமூகங்களுக்கும்



எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. எதிரானதே. இருந்தும் இப்படியானவர்களை சனங்கள் மீள மீளத் தெரிவு செய்து அதிகாரத்தை அவர்களின் கைகளில் கொடுப்பது எதற்காக?

தற்போதுள்ள அரசியல் கட்சிகளோ தலைவர்களோ நிச்சயமாக எந்தச் சமூகத்தையும் ஈடேற்றக் கூடிய மனதோடுமில்லை. அதற்குரிய ஆற்றல், அறிவோடுமில்லை. ஆனாலும் சனங்கள் இவர்களைத் தெரிவு செய்வது எதற்காக? வேறு தரப்புகளைத் தெரிவு செய்வதற்கு யாரும் முன்வருவதில்லையே? இதைக்குறித்து ஒவ்வொருவரும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். இது நாடு இன்று விதித்திருக்கும் அவசிய நிலையாகும். எதிர்காலம் விதித்திருக்கும் நிபந்தனையாகும். இதைப் புறக்கணித்தால் தொடர்ந்தும் அனர்த்தங்களும் பின்னடைவும்

கருணாகரன்

அழிவுகளுமே நிகழும்.

2009 இல் யுத்தம் முடிந்த பிறகு, நாட்டை மீள் நிலைப்படுத்த, அமைதியில் வளர்த்தெடுக்க, சமாதானத்தை வலுப்படுத்த நல் வாய்ப்புகள் ஏராளமிருந்தன. இனமுரண்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நற்சூழல் அமையப்பெற்றிருந்தது. உலகம் வலியுறுத்தியதும் இதையே.

யுத்தம் உண்டாக்கிய கசப்பான அனுபவங்களும் வாழ்விழப்பும் இனமுரணரசியல் குறித்த தெளிவையும் படிப்பினைகளையும் அனைத்துச் சமூகத்தினருக்கும் வழங்கியிருந்தன. யுத்த முடிவுக்குப் பிறகு அமைதியின் ருசியையும் சமாதானத்தின் அவசியத்தையும் உணரக்கூடிய நிலை எல்லோருக்குமிருந்தது.

ஆனால் எல்லோரும் இதைப் புறக்கணித்தனர். புறக்கணித்து விட்டு தொடர்ந்தும் இனவாத அரசியலின் பின்னாலேயே அனைவரும் அணி திரண்டனர். தமிழர்கள் தமிழ்க்கட்சிகளின் பின்னும் முஸ்லிம்கள் முஸ்லிம் கட்சிகளின் பின்னும் என. இப்படியே மலையக மக்கள் மலையகக் கட்சிகளுக்குள்ளும் சிங்கள மக்கள் சிங்கள மேலாதிக்கக் கட்சிகளான ஐதேக, சுக மற்றும் ஜே.வி.பியினுள்ளும். இவ்வாறு இன ரீதியான சட்டகங்களுக்குள் அடைபடுவது தீயதாகும் என்று யாரும் கருதவில்லை. இனவாத அரசியலைக் கைவிடுமாறு கோரிய குரல்கள் பரிகசித்துப் புறக்கணிக்கப்பட்டன.

மட்டுமல்ல, வடக்குக்கிழக்கு நோக்கி வந்த சிங்கள மக்களிடம் தமிழ்ச்சமூகம் உரையாடலை நடத்தவே இல்லை. சிங்களச் சமூகமும் இடங்களை வேடிக்கை பார்க்க முற்பட்டதே தவிர, பாதிப்புகளையும் காயங்களையும் காணவும் ஆற்றுப்படுத்தவும் முயற்சிக்கவில்லை. இதைக்குறித்துச் சிந்தித்து இதற்கான ஒரு ஏற்பாட்டை, சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான பொறிமுறைகளை எவரும் உருவாக்கவும் இல்லை.

ஆனால் யதார்த்தத்தில் இனவாத அரசியலைக் கைவிடுமாறும் அதை எதிர்க்குமாறும் 2009 க்குப் பிந்திய சூழல் வலியுறுத்தியது. அது பகை மறப்பையும் இனங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வையுமே வற்புறுத்தியது. இதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு அரசாங்கத்தையும் அரசியற் கட்சிகளையும் சர்வதேச சமூகம் கூடக் கேட்டிருந்தது.

இருந்தும் யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை.

பகை மறப்பு, புரிந்துணர்வுக்கான செயற்பாடுகள், இன ஐக்கியம் என்று ஒப்புக்கு சில முயற்சிகளை எடுப்பதாக அரசாங்கம் ஒரு தோற்றத்தைக் காண்பித்தது. நடைமுறையில் இதற்குரிய முக்கியத்துவமும் மையச் செயற்பாட்டுக்கான ஒத்துழைக்கும் கொடுப்படவுமில்லை. கவனமெடுக்கப்படவுமில்லை.

பகை மறப்பு, புரிந்துணர்வு, சமூகங்களுக்கிடையிலான ஊடாட்டம், உறவு, அரசியல் தீர்வு, அதற்கான அரசியலமைப்பு உள்ளிட்ட நிலைமாறு காலகட்டச்செயற்பாடுகளை முன்னிலைப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேரளவில் இருந்தாரே தவிர, ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. அப்படி அர்த்தபூர்வமாக அவர் எதையாவது செய்திருந்தால் அவற்றின் விளைபயன் என்ன என்று அவர் சொல்ல வேண்டும். அல்லது அதை அறிந்தவர்கள் இங்கே சொல்லலாம்.

ஆகவே அமைதிக்காலச் செயற்பாடுகளின் தோல்வி சமூகங்களுக்கிடையில் கசப்பையும் அரசியல் நிறைவின்மைகளையும் வளர்த்துக் கொண்டிருந்தன. யுத்த முடிவுக்குப்பிறகு அரசியல் தீர்வும் சமனிலையும் (பாரபட்சமற்ற நிலை) ஜனநாயக மேம்பாடும் நிவாரணமும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கூடவே சிறுபான்மையினச் சமூகங்கள் மறுபடியும் சிங்கள பௌத்த மேலாதிக்க அச்சுறுத்தலுக்குள்ளாகத் தொடங்கின.

அமைதிக்காலச் செயற்பாடுகள் என்பது யுத்தகாலச் செயற்பாடுகளைப்போல தீவிர கவனத்திற்குரியன என்று இந்தப் பத்தியாளர் பல தடவை அழுத்திக்கூறி வந்திருக்கிறார். இன்னும் சிலரும் இதை ஒத்ததாக வலியுறுத்தல்களைச் செய்தனர். ஆனால் அதெல்லாம் கவனத்திற் கொள்ளப்படவில்லை. உண்மையில் அமைதியையும் சமாதானத்தையும் தீர்வையும் கொண்டு வருவதும் கூட ஒரு போர்க்கால நடவடிக்கையைப்போல அதிக நிதி, அதிக வளம், அதிக கவனம், அதிக உழைப்பு போன்றவற்றைக் கோருவனவே. இதைச் செய்யாமல் ஒப்புக்குக் காரியமாற்றுவதாகக் காலம் கடத்தியதன் விளைவே இலங்கை இன்னும் சமூகங்களுக்கிடையிலான முரண்களாகவும் வெடிகுண்டுகளாகவும் மாறி வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால் தற்போதுள்ள அரசியல் போக்கினையும் அரசியலாளர்களையும் நிராகரிக்க வேண்டும். இது கடினமே. ஆனால் சனங்கள் நினைத்தால் இது சுலபமே. ஏனெனில் எவரையும் அங்கீகரிப்பதும் நிராகரிப்பதும் மக்கள்தானே!


# மூளைக்குள் இருப்பது வாளும் குண்டுகளும் பின்னால் இருப்பது வர்த்தக நலன்கள்

14ஆம் திகதி மே மாதம் ஒரு வாடகைக் காரில் பயணம் செய்தேன். சாரதி இளைஞர். வாடகைக்கார் கம்பனிக்கு வருமானம் குறைந்து விட்டது என்றும் அதனால் தனக்கு சம்பளம் குறைவதாகவும் அங்கலாய்த்தார். காலை 10.15 வரை இரண்டு ஹயர்கள்தான் கிடைத்தன என்றார். ஊரடங்கால் இரவு நேரச் சவாரிகள் இல்லை என்றார்.

மே மாதம் 12, 13 ஆம் திகதிகளில் வட மேல் மாகாணத்தில் சிலாபத்திலும் கினியாம, கொட்டம்பிட்டிய, மினுவான்கொடை மற்றும் ஏனைய இடங்களிலும் மசூதிகளும், முஸ்லிம்களின் கடைகளும் வீடுகளும் தாக்கப்பட்டன. சில உயிரிழப்புக்கள் நடந்திருந்தன. இந்நிலையில்தான் சாரதிக்கும் எனக்குமிடையிலான உடையாடல்.

'சண்டையையும் வன்முறையையும் நிறுத்தினால் ஊரடங்கும் நீங்கும். உங்கள் சம்பளமும் மீண்டும் உயரும்' என்றேன்.'அதெப்படி? நாடு பூராகவும் மசூதிகளுக்குள் வாள்கள் இருக்கின்றனவே எனவே அதைக் கவனிக்க வேண்டும். அரசாங்கம் ரிசாட் பதியுதீனையோ, ஹிஸ்புல்லாவையோ அசாத் சாலியையோ கைது செய்யாமல் இருக்கிறார்களே! வாளை யார் கவனிப்பது?' என்றார்.

இந்த உரையாடலை ஊடகத்துறையில் உள்ள எனது நண்பர் ஒருவரிடம்



நிறுவனம் ஒன்றின் துறைத் தலைவர் ஒருவரிடம் பேச நேர்ந்தது. 'ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பின்னர் முடங்கிப்போன கல்வி நடவடிக்கைகளை எப்போது ஆரம்பிப்பது?' எனக் கேட்டேன்.

'இப்போ எப்படித் தொடங்குவது அவர்கள் வந்தால் குண்டு வைத்து விடுவார்களே'

என்றார் அவர்.

அவரின் நண்பரான இன்னொரு புத்திசீவியும் அதனையே ஆமோதித்தார். இந்த புத்திசீவிகள் மாத்திரமல்ல, மட்டக்களப்பிலும் மலையகம் தவிர்ந்த ஏனைய தமிழ் பிரதேசங்களிலும், இந்தக் குண்டுப் பீதியும் புரளியும் வதந்தியும் தலைவிரித்தாடுவதை தெருவிலும் வீட்டிலும் கூடிக் கதைக்கும் போது நடக்கும் உரையாடல்கள், முகநூல் குறிப்புக்கள் மற்றும் இணையச் செய்தித் தளங்கள் மூலம் கண்டேன்.

வாளேந்திய சிங்கத்தை தேசியக் கொடியில் கொண்டது எமது நாடு. எமது கோயில்களிலும் வாளும் வேலும் கதாயுதமும் சக்கராயுதமும் சூலமும் நிறைந்துள்ளன.

ஆயுதம் இல்லாத கடவுள்கள் சைவ சமயத்தில் இல்லை. அது மட்டுமல்ல பிள்ளைக்கறி கேட்ட கடவுளைக் கும்பிடுபவர்கள் எமது சைவத் தமிழ் பெருமக்கள்.

இவற்றையே பாடப்புத்தகங்கள் உட்பட அறநெறிப்பாடசாலைகளிலும்

செல்வி.கார்க்கி

பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். எமது மூளைக்குள் வாளும் குண்டும் இல்லாமல் வேறு என்ன இருப்பதற்குச் சாத்தியம் இருக்கிறது?

இது மாத்திரமல்ல, மண்டூர் கோவிலிலுள்ள துவக்கை என்ன செய்வது?

எமது ஆதிக்குடிகளான வேடுவர் தமது அடையாளமாகக் கொண்டு தோளில் தூக்கிச் செல்லும் கைக் கோடரியை என்ன செய்வது?

முஸ்லிம்களில் சிலம்படி, வாள்வெட்டு நடனங்கள் எல்லாம் கிழக்கின் கலாச்சார அடையாளங்கள் தானே. அவற்றை என்ன செய்வது?

இவற்றுக்கெல்லாம் நாமும் எமது அரசாங்கமும் தடைவிதித்து, அடுத்த தலிபான்களாக ஆகப்போகிறோமா? ஆனால் இந்த ஆதங்கங்களுக்கும் நகைச்சுவைக்கும் பின்னால் இன்னுமொரு அபாயகரமான விடயமும் - சட்டத்திற்குப் புறம்பானதுமாக உள்ளது.

அதுதான் எமது தமிழ் வர்த்தகங்களினதும் உள்ளூராட்சி சபைகளினதும் இனவாதமும் வர்த்தக நலன்களும். மட்டக்களப்பில் மாநகர சபை பகுதியில் மே மாதம் 1ஆம் திகதி பிற்பகல் ஒரு நாடகம் நடந்தேறியது. ஹெல்மெட்டால் முழு முகத்தையும் மூடிய மோட்டர் சைக்கிள் இளைஞர்களின் பவனி, முன்னே வருபவரை அடித்துத் தள்ளிவிடும் வேகத்தில் பார் றோட்டிலும் ஆஸ்பத்திரி ஆனைப்பந்திச் சந்தியிலும் பிரயாணித்தனர். பின்னால் ஒலிபெருக்கி கட்டிய ஆட்டோ ஒன்று ஒரு நோட்டீஸ் வாசித்தபடியும் விநியோகித்தபடியும்.

' வியாபாரிகள் என்ற போர்வையில் ஊருக்குள் நுழையும் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த இளைஞர்கள் விழிப்புடன் செயற்படுங்கள்'

' தன்மானம் உள்ள தமிழனாய் நாம் வாழ, முஸ்லிம்களின் கடையில் பொருட்களுக்கும் கொலை வெறி கொண்ட பயங்கரவாதிகளுக்குத் தீனிபோட்டவர்களின் பொருளாதாரத்தில் தடையை ஏற்படுத்த உன்னால் முடியும் தமிழா'

தொடர்ச்சி... (பக்கம் -15)

# ஆலையடிவேம்பு பிரதேசமும் கிராமிய வழிபாடும்



அருவி ஆற்றில் அலைமோத அருகே நின்ற பலா மரத்தில் பலாச்சுளைகளில் இருந்து பாகு வடிய, அந்தப்பாகு மலைஊற்றினுடாக ஆற்றில் கலக்க, மான்களும் மயில்களும் குரங்கினங்களும் அவற்றை குடித்து இன்புற, தேவ கன்னிகைகளைப்போன்ற பெண்கள் ஆற்றில் நீரெடுக்க வர, பெண்களை கண்ட மிருகங்கள் அலறியவாறு ஓட, அதைக் கண்ட பெண்கள் வாய்விட்டு சிரிக்க, சிரிப்பால் நிலத்தில் முத்துக்கள் சிதறும்; அவ்வாறு வளம் பொருந்திய கிராமம் என கவிஞர்கள் கிராமத்தின் அழகை வர்ணிப்பர்.

அவ்வாறே நிலவளம், நீர்வளம், மண்வளம், கனிமவளம் என எங்கு பார்த்தாலும் பச்சை படர்ந்தது போன்று வயற்காட்சிகள், அதில் பட்சிகளின் குரலோசைகளுடன் கடல், ஆறு, மலை, வயல்வெளி, என இயற்கை அன்னையின் படைப்பில் சிறந்து விளங்கும் பிரதேசமே ஆலையடிவேம்பு பிரதேசமாகும். ஒரு பிரதேச செயலாளர் பிரிவு ஒரு பிரதேச சபை என மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரு பெரும் பிரிவுகள்.

கிராமம் என்றால் அங்கு முக்கியத்துவப் படுத்தப்படும் விடையம் குல தெய்வ வழிபாடு ஒவ்வொருவருக்கும் தங்களது பழமைபேணும் குல தெய்வ வழிபாடுகள் உள்ளன.

எமது ஆலையடிவேம்பு பிரதேசமும் பல கிராமிய வழிபாடுகளையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்டமைந்த எழில் மிகு பிரதேசமாகும். வந்தாரை வாழவைக்கும் நில வளமும், நீர் வளமும் கொண்டமைந்த சங்ககால முல்லை நிலத்தின் பண்பு கொண்ட கிராமம் இங்கு கண்ணகி வழிபாடு , சடங்கு மற்றும் காளி, நாக காளி, நாகபூசணி, பெரியதம்பிரான், நாக கன்னி, கடலாட்சியம்மன் போன்ற ஆலயங்கள் அமையப்பெற்று பண்டைய கிராமிய வழிபாடுகளைப் பின்பற்றும் கிராமங்களின் ஒன்றாகத்திகழ்கின்றது .

**கண்ணகி வழிபாடு**

கண்ணகி வரலாற்றில் இலங்கையில் பல இடங்களில் கண்ணகி அம்மனுக்கான சடங்குகள் நடைபெற்று கண்ணகி வழிபாடு மிவும் பிரபல்யம்வாய்ந்ததாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆலையடிவேம்பு பிரதேசத்திலும் பட்டி நகர் கண்ணகி அம்மன் ஆலயம் கஜபாகு மன்னனால் கொண்டுவரப்பட்டது. சுமார் 2000 வருடம்

வடிவேல் டினேஸ்

வரலாற்றைக் கொண்ட இவ் ஆலயமானது மதுரையை எரித்த கண்ணகியின் எல்லையற்ற கோபமுகத்துடன் அமையப்பெற்ற ஆலயங்களில் ஒன்றாக அமைகின்றது.

ஆதி காலங்களில் இவ் ஆலயம் காட்டினால் மூடப்பட்டு காணப்படும் எனவும் வருடாந்த விழாவிற்கு மாத்திரம் காடுகளை அழித்து துப்பரவு செய்து அம்மனுக்கு வழிபாடு நடத்தப்பட்டது எனவும் வரலாறு கூறுகின்றது. தற்போது அம்மனுக்கான மூன்று வேளை பூஜைகள் நடைபெற்று வருடாந்த திருக்குளிர்ச்சி உற்சவமும் எட்டாம் சடங்கும் சிறப்பாக எமது கிராம மக்களினால் நடத்தப்படுகின்றன. அதுமட்டுமல்ல கோளாவில் பிரதேச கண்ணகியம்மன் ஆலயம் மருதையடி மாணிக்கப்பிள்ளையார் சமேத கண்ணகியம்மன் ஆலயங்களும் பிரசித்திவாய்ந்த வழிபாட்டு முறைகளை கொண்டமைந்த ஆலயங்களாகும் ஏதிர்வரும் 14ம் திகதி (2019.05.14) பட்டிநகர் அம்மனது திருக்குளிர்ச்சி உற்வசவம் கதவு திறத்தலுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருதையடி மாணிக்கப்பிள்ளையார் சமேத கண்ணகியம்மன் ஆலயத்தில் ஒரு நாள் இரவு நேரத்தில் சலங்கை சத்தத்துடன் கண்ணகியம்மன் ஆலையத்தை சுற்றி வந்ததை பக்தர்கள் நேரில் கண்டமையும் அம்மன் ஊர்வலத்தில் அம்மை மந்திரக் கட்டுக்கு உள்ளடக்கியபோது அம்மனை சுமந்து சென்ற பூசாரி கீழே விழ அம்மனது கும்பம் கீழே விழாமல் அந்திரத்தில் நின்ற வரலாறுகளும் உண்டு. நாக கன்னி, நாககாளி, நாகபூசணி வழிபாடு

இந்துக்களிடையே தொன்று தொட்டு இருக்கும் நம்பிக்கையும் விஞ்ஞானத்திற்கும் அப்பால் சென்று மக்களிடையே ஒரு பயஉணர்வையும் ஏற்படுத்துவதுதான் மாந்திரிகம், செய்வினை.

செய்வினை என்றால் என்ன ? இது உண்மையா ? அல்லது மக்களின் மனதிற்குத்தான் இவ்வாறான எண்ணங்கள் தோன்றுகின்றதா ? இவ்வாறான பல கேள்விகளுக்கு ஆலையடிவேம்பு பிரதேச நாக கன்னி, நாக காளி வழிபாடு ஊடாக பதில் கிடைத்தமை என்பது விஞ்ஞானத்திற்கும் மானிடவியலுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாக இங்கு காணப்படுகின்றது. இவ் ஆலையத்தின் பிரதான பூசகர் பூசை நேரத்தில் தெய்வ உருவேறி பக்தர்களுக்கு வாக்கு சொல்வதும் நடக்கும்.

இங்கு காணப்படும் பாம்பு புற்றுக்கு மக்களால் பால் வைக்கப்படுவதும் பாம்பினத்தின் நாகத்தினை தெய்வமாக வழிபடுவதும் வழிபாட்டில் குற்றம் குறைகள் இருந்தால் நாககன்னி அல்லது நாகராஜா கனவில் வந்து தொல்லை தருவதாகவும் பின்னர் வழிபாட்டில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ததும் கனவில் இவ்வாறான தொல்லைகள் இல்லை என்பதும் பிரதேச மக்களிடையே காணப்படும் நம்பிக்கை. ஆலையடிவேம்பு கண்ணகி கிராமத்தில் உள்ள நாக பூசணி அம்மன் ஆலயம் இதற்கு சிறந்த உதாரணமாக விழங்குகின்றது.

மருதையடி மாணிக்கப்பிள்ளையார் சமேத கண்ணகியம்மன் ஆலயமானது ஆலையடிவேம்பு பிரதேச மக்களால் வழிபடப்பட்டாலும் அது அக்கரைப்பற்று உள்ளூராட்சிசபைக்குள் உள்வாங்கப்பட்ட ஆலயமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது கிராமத்தில் பஞ்சமுக ஆஞ்ஞநேய வழிபாடுகளும் உண்டு இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறுவதுடன் பூரணை தினங்களின் அன்னதானமும் வழங்கப்படுகின்றது. இவ் ஆலயத்தில் ஒவ்வொரு நட்சத்திரங்களுக்குமான மரங்களும் நடப்பட்டு தினமும் வழிபாடுகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மரத்தினை உரிய ராசிக்காரர்கள் சுற்றி வளைத்து பஞ்சமுக ஆஞ்ஞநேயரை வழிபட்டால் தோஷங்கள் நீங்கப்பெற்று சுகவாழ்வு பெறுவர் என்பது மக்களது பாரிய நம்பிக்கையாகும்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## பழம் ஏடு படிக்க ஆள் இல்லை

இப்போது இருக்கின்றவர்கள் எல்லோரும் ஏடுகள் வாசிக்கமாட்டார்கள், வாசிக்கக்கூடியவர்கள் ஒருசிலரே படுவான்கரைப்பிரதேசத்தில் இருக்கின்றனர். பல ஏடுகள் அழிந்துவிட்டன. இருக்கின்ற ஏடுகளையாவது புத்தகமாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும் என ஜீவிதன், சயந்தனுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்போதுதான் ஏடுவாசிக்க கூடியவர்கள் படுவான்கரையில் எங்குள்ளனர் எனும் தேடுதலை தேடவிளைந்தோம். அவ்வாறு சிந்தித்திருக்கும் போதுதான், வெள்ளையனும் தனது மனதில் பட்டதினை கூற ஆரம்பித்தான்.

தமிழர்களுடைய வரலாறு தொன்மை வாய்ந்தது. காலஓட்டத்தில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களினாலும், வெவ்வேறான பிரச்சினைகளினாலும் இலக்கியங்கள் அழிந்தமையும், அழிக்கப்பட்டமையும் வரலாறு. தற்காலத்தில் இருந்து மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு முன்பிருந்த வாழ்க்கை முறை, பண்டுபாடு, கலை போன்ற பல்வேறு அம்சங்களும், தற்போதைய நவீன கால யுகத்தில் மாறிவருகின்றன. இந்நடைமுறை மாற்றத்தால் பலவற்றை இழந்துவருகின்றோம். இந்நிலையில், படுவான்கரைப்பிரதேச மக்கள் தமக்கு முன்னரான மக்கள் கடைப்பிடித்த கலைகளை இன்றும் தம்சூழலிலே ஆடி, அரங்கேற்றி வருகின்றனர். அதேவேளை இலக்கியத்தின்பால் ஈடுபாடு கொண்டு, கூத்து, கரகம், கும்மி பாடல்களை எழுதக்கூடியவர்களும் இம்மண்ணிலே இன்றுவரை இருந்து கொண்டிருக்கின்றனர். நூலுருக்களாக தமது ஆக்கங்களை கொடுக்காவிட்டாலும், எழுதிய கதைகளை மக்கள் மத்தியிலே கலைகளின் ஊடாக கொடுக்ககூடிய கலைஞர்கள் உள்ளமையும் வரவேற்கத்தக்கதே. பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து பலநூல்கள் வெளிவந்து கொண்டிருந்தாலும் படுவான்கரைப்பிரதேசத்தில் இருந்து குறைந்தளவிலான எழுத்துக்களே நூலுருப் பெற்றிருக்கின்றன. இதற்கு கலைஞர்கள் வறுமைப்படைத்தவர்களாக இருக்கின்றமையும் காரணமேயாகும். அதேவேளை எழுத்தாளர்களை தட்டிக்கொடுத்து, அவர்களது ஆக்கங்களை தொகுத்து வெளியிடக்கூடிய முயற்சியாளர்களும் குறைவே. தமது கலைகளினை தொடர்ந்தும் அடுத்தசந்ததிக்கு கொடுத்துவிட வேண்டும் என்பதே இம்மக்களின் பெருவிருப்புமாகும்.

தற்கால யுகத்தில் கணினி மூலமான செயற்பாட்டின் மூலமாக, இலகுவான முறையில் தமது விடயங்களை பதிவுசெய்யக்கூடிய சூழல் உள்ளது. ஆனால் இற்றைக்கு ஒருநூற்றாண்டு காலத்தினை கடந்துபார்க்கின்ற போது, ஓலைச்சுவடிகளிலேயே எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. இதன்போது ஓலைச்சுவடிகளில் எழுத்துக்களுக்கான குத்துக்கள் வைக்கப்படுவதில்லை. அதேவேளை சில எழுத்துக்களும் தற்போதைய எழுத்து வடிவங்களில் இருந்து வித்தியாசப்பட்டிருந்தன. இதனால் தற்காலத்தில் இருக்கின்ற எல்லோரும் ஏடுகளில் எழுதப்பட்டதை வாசிக்கமாட்டார்கள். ஒரு சிலர் மாத்திரமே வாசிக்கக்கூடியவர்களாக உள்ளனர். எனவெள்ளையனும் பேசிமுடிக்க.

ஏட்டுப்பிரதிகளை வாசிக்கக்கூடிய ஒருவரை படுவான்கரைப்பிரதேசத்தில் தேடி சென்ற



போதுதான், பழங்குடிமடு கிராமத்தில் ஒருவரை சந்திக்க கிடைத்தது. அப்போதுதான் தனது அனுபவத்தினை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

1952ம் ஆண்டு பிறந்து, பழங்குடிமேடு கிராமத்திலே வசித்துவருகின்ற கணபதிப்பிள்ளை சிவஞானமூர்த்தியையே அண்மையில் சந்தித்தோம். ஏட்டுப்பிரதி ஒன்றுடன் எம்முன் அமர்ந்துகொண்டார். அப்பிரதிகளை பார்த்தபோது அதன் எழுத்துக்கள் மிகத்தெளிவாக தெரிந்தது. 1927ம் ஆண்டு எழுதப்பட்ட சித்தாருட நொண்டிச்சிந்து ஏடாக அமைந்திருந்தது. ஆண்டுகள் தமிழ் எழுத்துக்களினாலையே எழுதப்பட்டிருந்தன. அவ்வேட்டினை வாசிக்க கூறிய போது, சிந்து என்பதினால் சிந்து நடையிலையே அதனை வாசித்துக் காட்டினார். மிகவேகமாகவே வாசித்துக்கொண்டிருந்தார். அப்போதுதான் இதனை எங்கு கற்றுக்கொண்டீர்கள் என வினவிய போது, கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பித்தால், கண்ணகி வழக்குரை பாடுவார்கள், அப்போது அவர்களின் அருகிலே இருப்பேன் அவர்கள் பாடுவதை கவனிப்பேன். இதன்மூலமே இதனை பயின்றுகொண்டேன். எனது அப்பாவும் ஏடு எழுதியவர், வாசித்தவர் அப்போதும் பார்த்திருப்பேன் இவற்றின் மூலமாகவும் கற்றுக்கொண்டேன். இப்போதும் எனதருகே இருந்தீர்கள் என்றால் ஏட்டினை வாசிக்கக்கூடிய நிலையைப் பெற்றுவிடுவீர்கள் என்றார்.

இவ்வேட்டினை எழுதிமுடிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என

**படுவான் பாலகன்**

அவரிடம் வினவியபோது, ஏட்டிலையே அதுதொடர்பில் எழுதப்பட்டிருந்தது. 1927ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி எழுத ஆரம்பிக்கப்பட்ட சித்தாருட நொண்டிச்சிந்து ஏடு 1927ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் திகதி எழுதி முடிக்கப்பட்டிருக்கின்றது. இதேபோன்று 1890ம் ஆண்டு எழுதப்பட்ட ஏட்டினையும் வாசித்தாக கூறும் இவர், ஏடுகளை கொண்டு கொடுத்தால் அவற்றினை வாசித்துக்காட்டுபவராக இருக்கின்றார். இதுவரை அரிச்சந்திரன் கதை, வள்ளியம்மானை, தெய்வேந்திரன் அம்மானை, கண்ணகி வழக்குரை, வாகட ஏடுகள் என பலவற்றை வாசித்துக்

தொடர்ச்சி... (பக்கம் -15)

## சொல்லத் துணிந்தேன்! 08

2015ல் தோற்றுவிக்கப்பெற்ற 'நல்லாட்சி' அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு இம்முறையும் 'தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு' கை உயர்த்தி இருக்கிறது. இம்முறை ஒரு வித்தியாசம் என்னவெனில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான 'ரெலோ' வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதல்ல என்ற முடிவை எடுக்க, அக்கட்சியை சேர்ந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கோடிஸ்வரன் கட்சியின் முடிவை மீறி வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறார். 'ரெலோ' கட்சியின் தலைவரான அடைக்கலநாதன் பா.உ வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அவர் ஏன் எதிர்த்து வாக்களிக்கவில்லை என்பது எம்பிரானுக்கே வெளிச்சம். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினதும் அதன் பங்காளிக்கட்சிகளினதும் அரசியலைப்பார்த்து தலைசுற்றுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் க.கோடிஸ்வரன் வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்தது சரியா? பிழையா? என்பதற்கு அப்பால் 2015ம் ஆண்டிலிருந்து இன்றுவரை வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாறை மாவட்ட தமிழர்கள் அடைந்த சமூக பொருளாதார அரசியல் நன்மைகள் என்ன? விடை திருப்தியானதாக இல்லை.

1977ம் ஆண்டு பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளரான காலஞ்சென்ற ம.கனகரட்ணம் அவர்கள் அந்த வருடம் அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தை தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக்குழுவின் தீர்மானத்தை மீறி கையை உயர்த்தி ஆதரித்தார். அன்றைய தினம் பாராளுமன்றத்தில் வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமான அமரர் அ.அமிர்தலிங்கம் பா.உ அவர்கள் கனகரட்ணத்தை நோக்கி "இடிவிழும்" எனத் திட்டினார். அதே அமிர்தலிங்கம் பின்னாளில் தனது கட்சிச் சகாக்களிடம் கனகரட்ணத்தைப் பற்றி ஒருத்தரும் குறைகூற வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளும்படிக்கு நிலைமை மாறியது. காரணம் அந்தளவுக்குக் கனகரட்ணம் அவர்கள் மக்களுக்கு சேவை ஆற்றியிருந்தார். அன்று பொத்துவில் தொகுதியிலேயே பல இளைஞர் யுவதிகளுக்குப் பல அரச வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தார். பல பாரிய அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டார். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல 'கஞ்சிக்குடிச்ச' ஆற்றுக்குளத்தை மேலும் ஆறு அடி உயர்த்தி ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலத்திற்குக் நீர்ப்பாசனவசதி ஏற்படுத்திக்கொடுத்தைக் கூறமுடியும். அவர் காலத்திலேயே திருக்கோவில் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவானது. அவரது மறைவிற்குப் பின்னர் நியமனம் பெற்ற அவரது தங்கை திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவரது வழியில் பணிகளை முன்னெடுத்தார்.



இந்தப்பின்னணியில் பார்க்கும் போது கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கத்தை ஆதரித்து முட்டுக்கொடுத்ததன் மூலம் கோடிஸ்வரன் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்த ஒரு பாரிய நன்மையைக்கூற முடியுமா? குறைந்தபட்சம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தையாவது ஏற்படுத்த முடிந்ததா? அமரர் கனகரட்ணத்தின் பணிகளுக்கும் கோடிஸ்வரனின் பணிகளுக்குமிடையில் ஏணி வைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இருவருமே ஆட்சியிலிருந்த அரசாங்கத்தை ஆதரித்தவர்கள்தானே. ஆளுமையும்-ஆற்றலும்-அர்ப்பணிப்பும்-சமூகநலநாட்டமும் இல்லாத சுயலாப அரசியல்வாதிகளைப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்புவதால் இந்த அவலநிலைதான் தமிழ் மக்களுக்கு ஏற்படும். 'பானையில் இருப்பதுதானே அகப்பையில் வரும்' அம்பாறைமாவட்டத்தின் ஒரேயொரு பிரதிநிதியான கோடிஸ்வரனுக்கு மட்டுமல்ல மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இப் பழமொழி பொருந்தும். தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் மூப்புக்கருதி ஒரு மரியாதை

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

நிமித்தம் அவரை விதிவிலக்காக வைத்துக்கொண்டாலும் கூட தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனத்திற்காக நியமிக்கப்பெற்ற திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த துரைரட்ணசிங்கம் அம்மாவட்ட தமிழ்மக்களுக்கு என்ன குறிப்பிடும்படியான சேவைகளை செய்துள்ளார் என்றால் ஒன்றைமே இல்லை என்றே ஆகிறது. திருகோணமலை மாவட்டத் தமிழ் வாக்காளர்கள் நையாண்டிப் பண்ணிக் கதைக்கும் அளவுக்கு அவரின் செயற்பாடுகள் மந்தமாக உள்ளன. இனிவரும் தேர்தல்களிலாவது மாரி வெள்ளத்தில் அடிபட்டுவரும் 'ஏறுகெழுத்தி' மீன் போல காலத்துக்கு காலம் போலித் தமிழ்த்தேசிய வெள்ளத்தில் அள்ளுண்டு வரும் வினைத்திறன் அற்ற சுயலாப அரசியல்வாதிகளை அடையாளம் கண்டு முற்றாக நிராகரிப்பதன் மூலமே தேர்தல்மைய அரசியலிலிருந்து விடுபட்டு மக்கள் நலன்சார்ந்த ஒரு சமூகமாற்ற அரசியலை நோக்கிக் கிழக்குத்தமிழர்கள் பயணிக்கமுடியும்.

# விளையாட்டு

## ஐந்தாவது உலகக் கிண்ணம் 1992

1992ம் ஆண்டு பென்சன் ஹெட்ஜ்ஸ் உலகக் கிண்ணம் என்ற பெயருடன், வர்ண மேலங்கிகள், வெள்ளை நிறப்பந்து மற்றும் பகலிரவு போட்டிகள் என மேலும் புதிய பல மாற்றங்களுடன் ஐந்தாவது உலகக் கிண்ணத்தினை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்து நடாத்தின. இத் தொடரில் இங்கிலாந்து அவுஸ்திரேலயா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை மற்றும் சிம்பாவே ஆகிய எட்டு அணிகளோடு ஒன்பதாவது அணியாக அதுவரை காலமும் இனவொதுக்கல் கொள்கை காரணமாக தடைசெய்யப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணியும் முதன் முறையாக பங்குபற்றியிருந்து.

சுழற்சி முறை போட்டிகளின் முடிவில் அரை இறுதிப் போட்டிக்கு நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் தெரிவாகின. முதலாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணியும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மழையின் உதவியுடன் அதிஸ்ட வசமாக வெற்றிபெற்ற இங்கிலாந்து அணியும் இறுபொதிப்போட்டிக்கு தெரிவாகின.

இரண்டாவது அரையிறுதி போட்டியின்போது 43.5 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணிக்கு 13 பந்துகளில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது மழைகாரணமாக 2 ஓவர்கள் குறைக்கப்பட்ட நிலையில் தென்னாபிரிக்க அணிக்கு இலக்கு 1 பந்துக்கு 22 ஓட்டங்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்து. துரதிஸ்டவசமான முறையில் அது தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

25 மார்ச் 1992 அன்று மெல்பேன்



நகரில் பகலிரவாட்டமாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி மூன்றாவது முறையாகவும் இறுதிப் போட்டிக்கு தெரிவான இங்கிலாந்து அணியை 22 ஓட்டங்களால் வெற்றிகொண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக வஸீம் அக்ரம் தெரிவானதோடு தொடர் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணி வீரர் மார்டின் குரோ தெரிவானார்.

இலங்கை அணி இத் தொடரில் எட்டு போட்டிகளில் பங்கு பற்றி இரண்டு போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்று தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

### ஆறாவது உலகக் கிண்ணம் 1996

1996ம் ஆண்டு, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து நடாத்திய வில்ஸ் உலகக்

யாசின் அரபாத்



கிண்ணமானது இலங்கை கிரிக்கட் ரசிகர்களுக்கு இதுவரை மறக்க முடியாத விருந்தாய் காணப்படுகிறது. கடந்த உலகக் கிண்ண தொடரில் பங்கு பற்றிய 9 அணிகளோடு புதிய அணிகளாக கென்யா, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியமும் பங்கு பற்றியிருந்தன. குழுநிலை போட்டிகளின் போது பாதுகாப்பு காரணங்களுக்காக அவுஸ்திரேலியா மற்றும மேற்கிந்திய தீவுகள் அணிகள் இலங்கைக்கு வந்து விளையாடாததன் காரணமாக இலங்கை அணிக்கு அப்போட்டிகளில் வெற்றி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குழுநிலை மற்றும் காலிறுதி போட்டிகளின் முடிவில் இந்தியா, இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தெரிவாகின.

மார்ச் 17 அன்று லாஹூர் கடாபி மைதானத்தில் பகலிரவு போட்டியாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் அர்ஜுன ரனதுங்க தலைமையிலான இலங்கை அணி பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியை 7 விக்கட்டுக்களால்



வெற்றிகொண்டு கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 107 ஓட்டங்களையும் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றிய அரவிந்த டீ சில்வா தெரிவானதோடு தொடர் ஆட்ட நாயகனாக தொடரில் மொத்தமாக 221 ஓட்டங்களையும் 7 விக்கட்டுக்களையும் கைப்பற்றிய சனத் ஜெயசூரிய தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் முதன் முதலாக தொடரை நடாத்திய நாடு கிண்ணத்தை வெற்றி கெண்டது என்ற பெருமையை இலங்கை பெற்றுக்கொண்டது என்பதுடன் உலகக் கிரிக்கட் ரசிகர்கள் மட்டுமன்றி ஏனைய உலக நாடுகளின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்க்க வைத்தது.

### ஏழாவது உவகக் கிண்ணம் 1999

முதன்முறையாக ஐ.சீ.சீ கிரிக்கட் உலகக் கிண்ணம் என்ற நாமத்ததுடன் இங்கிலாந்தில் இடம்பெற்ற 7 ஆவது கிரிக்கட் உலகக் கிண்ண போட்டிகளில் ஒருசில போட்டிகள் அயர்லாந்து, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய நாடுகளிலும் நடைபெற்றன. இத் தொடரில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், கென்யா மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய 12 அணிகள் விளையாடியிருந்தன.

குழுநிலை மற்றும் சுப்பர்-6 போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தெரிவாகின. அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற விறுவிறுப்பான இரண்டாவது அரையிறுதி போட்டி சமநிலையில் முடிவுற்றதையடுத்து இரண்டு அணிகளும் சமமான புள்ளிகளை பெற்றிருந்ததனால் தேறிய ஓட்ட விகித அடிப்படையில் அவுஸ்திரேலியா அணி இறுதிப்போட்டிக்கு தெரிவானது.

ஜுன் 20 அன்று லோட்ஸ் மைதாணத்தில நடைபெற்ற பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டியில் ஸ்டீவ் வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியை 8 விக்கட்டுக்களால் இலகுவாக வெற்றிகொண்டு கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 4 விக்கட்டுக்கள கைப்பற்றிய சேன் வோர்ன் தெரிவானதோடு தொடர் ஆட்ட நாயகனாக தொடரில் மொத்தமாக 281 ஓட்டங்களையும் 17 விக்கட்டுக்களையும் கைப்பற்றிய தென்னாபிரிக்கா அணியின் லான்ஸ் குளூஸ்னர் தெரிவானார்.

இலங்கை அணி இத் தொடரில் ஐந்து போட்டிகளில் பங்கு பற்றி இரண்டு போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்று தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

### எட்டாவது உலகக் கிண்ணம் 2003

ஐ.சீ.சீ கிரிக்கட் உலகக் கிண்ணம் என்ற நாமத்ததுடன் 8 ஆவது கிரிக்கட் உலகக் கிண்ண போட்டிகள் தென்னாபிரிக்கா, கென்யா மற்றும் சிம்பாப்வே ஆகிய ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்றன. இத் தொடரில் இங்கிலாந்து அவுஸ்திரேலயா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள்,

தொடர்ச்சி... (பக்கம் -15)

## கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் புதிய அங்கத்துவப்படிவம் வெளியீடு

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் புதிய அங்கத்துவ விண்ணப்பப்படிவம் 10.05.2019 அன்று கழகத்தின் தலைவர் பே.சடாற்சரராஜாவால் வெளியிடப்பட்டது. இவ்விண்ணப்பபடிவத்தை புதிதாக வடிவமைப்பதற்காக அண்மையில் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டு, பரிசீலனையின் பின் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.




இவ்விண்ணப்பத்தை கழகத்தில் அங்கத்தவராக இருக்கும் சகல அங்கத்தவர்களும் பூரணப்படுத்தி எதிர்வரும் 30.05.2019க்கு முன்பாக செயலாளரிடமோ அல்லது தலைவரிடமோ அல்லது பொருளாளரிடமோ ஒப்படைக்குமாறு தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

30.05.2019 பின் வழங்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது எனவும் தலைவர் தெரிவித்துள்ளார். விண்ணப்பங்களை செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## ஹொக்கிலயன்ஸ் கழக சீருடை வெளியீடு!



காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் 2019ஆம் ஆண்டுக்கான சீருடை வெளியீட்டு நிகழ்ச்சி கழகத்தலைவர் தவராசா லவன் தலைமையில் நடைபெற்றது. கழகப்போசகர்களான உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு மக்கள்வங்கி முகாமையாளர் தி.உமாசங்கரன் ஆகியோர் கலந்துகொண்டு கழக உறுப்பினர்களுக்கு சீருடைகளை வழங்கிவைத்தனர்.
படங்கள் காரைதீவு நிருபர்

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## பாய்காரக் கிறீன் காக்கா

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் கதை—2)*

1949 களில் அதாவது 70ன் வருடங்களுக்கு முன்னர்

மட்டக்களப்பு படுவான்கரையை அண்டியதும் முழுக்க முழுக்கத் தமிழ் மக்கள் மாத்திரமே வாழ்ந்துமான அமிர்தகளி ,புன்னைச் சோலை, மட்டிக்களி, சீலாமுனை, பனிச்சயடி, உப்போடை ஆகிய இடங்களில் பாய் வியாபாரம் செய்து வந்தவர்தான் இந்தக் கிறீன் காக்கா.

அம்மக்கள் மத்தியில் கிறீன் காக்கா என்ற இந்தப் பெயர் வெகு பிரசித்தம். பாய்க்காரக் கிறீன் காக்கா எனவும் இவரை அழைத்தனர். காத்தான்குடியில் பின்னப்படும் இப் பாய் மிக விசேடமான பாய். பன்புல் எடுத்துப் பதப்படுத்தி, நாராக்கி., அதற்கு வர்ணமூட்டி, அதனைகொண்டு பாயிழைப்பர் காத்தான்குடி இஸ்லாமியப்பெண்கள்.

இழைத்தல் என்றசொல் அழகான சொல். ஒன்றோடு ஒன்றைப் பின்னி புதியதொன்றை உருவாக்கல் என்பது இதன் அர்த்தம். பாய் இழைத்தல் காத்தான்குடி இஸ்லாமியப் பெண்களின் ஒரு குடிசைக் கைத்தொழில். அதிலும் காத்தன்குடியிலுள்ள பூ. நொச்சிமுனை பாய் விசேடமானது.

பன் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஒரு நீண்ட புல். குருக்கள் மடத்தில் இது அதிகமுண்டு. காத்தான்குடிக்கு இங்கிருந்தும் பன் ஏற்றுமதியாகின்றது. கற்பன், நெட்டிப்பன், கோரப்பன் என பல வகைப் பன் உண்டு. இப்பன்னில் பலபொருட்கள் செய்வர். அவற்றுள் முக்கியமானதுதான் இந்தப் பன் பாய்.

குழந்தைப் பாய், குழிப்பாய், பின்னல் பாய், பிணிப்பாய், கரைப்பாய் கல்யாணப்பாய் எனப் பாய்கள் பல வகைப்படும். பச்சை சிவப்பு மஞ்சள் என்ற வர்ணக் கோழிச் சாயங்களில் தோய்த்து எடுக்கப்படும் பன் ஓலைகளை குறுக்கு மறுக்காகப் பல்வேறு டிசைன்களில் பின்னிப் பாய் உருவாக்குவர். அது ஒரு கலை. ஒவ்வொரு பாயும் 4 அடி அகலத்திலும் ஏழு அடி நீளத்திலும் அமைந்திருக்கும். தமிழ் மக்கள் தமது வீட்டு விறாந்தையில் அதனை விரித்து விருந்தினரை அதில் அமரச்செய்வர். இப்போதையப் போல கதிரை சோபா வராதகாலம். வீட்டுக்கு விருந்தினர் வந்தால் இந்தப்பாயைத் தான் எடுத்து விரிப்பர்.

கட்டில்கள் சாதாரண வீடுகளில் இல்லாதகாலம். இரவில் படுப்பதற்கும் இப்பாய்தான் பயன்படும். வீட்டு முற்றத்து வெள்ளை மணலில் பூரணச் சந்திர ஒளியில் இதனை இரவில் விரித்து மெல்லிய காற்று வீச பாயின் மணத்தை முகர்ந்தபடி அம்மாவின் அணைப்பில் அதன் மீது படுத்து அனுபவித்த அந்த 1949 ஆம் ஆண்டை நினைத்துப்பார்க்கிறேன்.

வருடாந்தம் நடைபெறும் கிராமியக் கோவில் சடங்குகளில் இப்பாய் மீதுதான் எம்மூர்த் தெய்வங்களுக்கான மடை வைக்கப்படும். மடை என்பது வாழை இலைவைத்து, அதன்மீது நெல்லு, பூ, தேங்காய் பொங்கல் என்னபன குவித்து, காளி, மாரி, வைரவர் கண்ணகை, பெரியதம்பிரான், நாகதம்பிரான், கடனாச்சியம்மன் போன்ற தெய்வங்களுக்கு படைக்கப்படும்.

ஒரு விதப் படையல் அது மிக மிகப் புனிதமானது. தமிழர் வீட்டில் கலியாணம் நடை பெறுவதென்றால் மணமக்களை இருத்த விருந்தினர்க்கு விரிக்க காத்தன்குடியில் சொல்லித்தான் பாய் செய்வர். அதற்குப் பெயர்தான் கலியாணப்பாய். அப்பாய்கள் வழமையான பாய்களை விட அலங்காரமாகவும் மிகப்பெரியனவாகவும் இருக்கும். மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டில் இந்தப் பாய்கள் ஒரு முக்கிய பொருள். பாயின்றி அந்தப் பண் பாட்டில் அழகில்லை. அதற்கான அழகான பாய்களை தமிழ் மக்களுக்கு வழங்கியவர்கள் இந்தக் காத்தான்குடி இஸ்லாமியப் பொண்டுகளே.

இஸ்லாமியரின் பாய் அன்று தமிழர் பண்பாட்டின் ஓர் அங்கமாகி இருந்ததை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அழகியல் ரசனை மிக்க இஸ்லாமியப் பொண்டுகள் வகை வகையான பாய்களை கண்ணைக் கவரும் வர்ணங்களில் தயாரித்தனர். அப்பாய்களை அவர்கள் பின்னுகின்ற காட்சியே ஓர் அழகு. அனைவரும் பொருளாதாரத்தில் மிக மிக கீழ் நிலையிலுள்ள பெண்கள் அவர்களிடம் வியாபாரிகள் சற்றுக் குறைந்த விலையில் இப்பாய்களைப் பெற்று எமக்கு விநியோகம் செய்வர். வியாபாரம் அல்லவா? வியாபாரம் ஆயினும் அதற்குள் ஓர் அறம் இருக்கும். இப்பாய்களை மட்டக்களப்பு தமிழ் மக்களின் காலடிக்கு எடுத்து வந்து மேற்குறிப்பிட்ட ஊர்களில் விற்பனை செய்தவர்தான் இந்தக் கிறீ ன் காக்கா.

அன்று பிரசித்தமாயிருந்த மிகபெரிய அகலமான பெரிய கரியர் பூட்டிய றலி பசிக்களில் பின் பக்கத்தில் ஒரு தொகைப் பாய்களை அடுக்கி வரிசையாக கட்டியபடி, அவர் வருவது ஒரு ராஜகுமாரன் தேரில் வருவது போல இருக்கும். அவர் ஒரு அழகான ராஜகுமாரன்தான். பிரகாசிக்கும் தகதகவென்ற வெள்ளையுடம்பு. சவரம் பண்ணப்பட்ட பழபழக்கும் மொட்டைத்தலை, தலையை மறைக்கும் வால் வைத்த ஒரு சிவப்பு நிறத்துருக்கித்தொப்பி. உடம்பில் ஒரு முழுங்கைவரை நீண்ட ஒரு வெள்ளை வெள்ளியன், கோடுபோட்ட வெள்ளைச் சாரன், இடுப்பில் தோலினாலான ஒரு பெரிய அகலமான பெல்ட், அதில் பலவித அறைகள். எமது வீட்டின் முன்னால் வந்து சைக்கிளை ஸ்ராண்டில் போட்டு விட்டு உஸ்ணம் பொறுக்க முடியாமல் தொப்பியைக் கழற்றி, இடுப்பில் தொங்கு வெள்ளைக் கைலேஞ்சியை எடுத்து பழ பழக்கும் அந்த மொட்டை தலையை அவர் துடைத்து விட்டு தனது அழகான வரிசை வெள்ளைப் பற்கள் பளிச்செனத் தெரியச் சிரிப்பது ஓர் ரம்மியமானதொரு காட்சி. அப்போது அவர் மிக அழகாகத் தெரிவார்.

நடுத்தரம் தாண்டிய வயது, இங்கிதமாகப் பேசுவார், மிக மிக மரியாதை கலந்த பேச்சு. ஊரில் அவருக்கு மிகுந்த மதிப்பு. கிறீன் காக்கா என்றால் சிறியவரிலிருந்து பெரியவர் வரை அவரை அறியாதார் இல்லை. எல்லா வீடுகளுக்கும் அவர் செல்வதே காரணம். பாய் வீடுதேடிச் செல்லும்.

என் அம்மா அவருக்கு ஒரு தங்கைபோல. காக்கா என்றுதான் அம்மா அவரைக் கூப்பிடுவா. புள்ள என்றுதான் என் அம்மாவை அவர் அழைப்பார். சில வேளைகளில் முத்தம்மா என்றும் கூப்பிடுவார். றலி சைக்கிளில் எங்கள் வீட்டுக்கு முன் வந்திறங்கும் அவர் அத்தனை பாய்களையும் தூக்கிக்கொண்டு வளவுக்குள் வருவார். எங்கள் வீட்டு விறாந்தையில் அவற்றை வைப்பார். பாய்க்குவியலால் விறாந்தை நிறைந்திருக்கும். வரும்போதே 'புள்ள முத்தம்மா ஒரு தேத்தண்ணீ போடுகா' என மிக உரிமையுடன் கேட்டபடிதான் வருவார். ஒரு தங்கையிடம் அண்ணன் உரிமையோடு கேட்பது போல. கிறீன் காக்க கேட்கமுதலே குசினிக்குள் அடுப்பு மூட்டி பானையில் தண்ணீர் வைக்கப்பட்டு விடும். அம்மா விறந்தையில் விரிக்கும் பாயில் அமர்ந்து அப்பாயின் மீது தனது சிவப்பு நிறத் துருக்கித் தொப்பியை வைத்துவிட்டு அம்மாவுடன் குடும்ப விடயங்களை பேச ஆரம்பித்து விடுவார்,அப்பா இருந்தால் உரையாடலில் அவரும் கலந்து கொள்வார்.

அப்போதுதான் முதன் முதலில் அப்படி ஒரு தொப்பியை நான் பார்க்கிறேன். புதுவிதமான தொப்பி நீளமாக அது இருந்தது,அதன் உச்சியில் குஞ்சம் தொங்கியது. அப்பா அம்மா வுடன் கிறீன் காக்கா உரையாடுவார் நானும் அக்காவும் தங்கைமாரும் வாய் பார்த்தபடி இருப்போம். வீட்டில் தேநீர் அருந்திக் களைப்பாறிய பின் ஐந்து ஆறு பாய்களைத் தூக்கிகொண்டு ஊருக்குள் இறங்கி விடுவார்.




எனக்குக் கிறீன் காக்கா மீது எனக்கு நல்ல விருப்பம். அவரின் தோற்றமும் கதைகளும் அந்நியோன்னியமும் அவர் சுமுகமாகப் பழகும் முறையும் விசேடமாக அவர் கொணரும் பாய்களின் வர்ண அழகும் அவர் மீது பெரும்பிரியத்தை ஏற்படுத்தியிருந்தன.



அவருடன் வியாபாரத்திற்குச் செல்ல அம்மாவிடம் அனுமதியும் பெற்றுக் கொண்டேன். ஆனால் ஒரு நாளும் என்னிடம் அவர் பாயைத் தூக்கிக்கொண்டுவரச் சொல்லவில்லை. ஒரு பேச்சுத் துணையாகவே என்னை அவர் சில வேளைகளில் அழைத்துச் சென்றார். வீடு வீடாகச் செல்வார் அவர்களின் விறாந்தைகளில் ஆசுவாசமாக இருந்து பாய்களை விரித்து வியாபாரத்தை ஆரம்பிப்பார். வியாபாரம் மாத்திரம் அங்கு நடைபெறுவதில்லை. அவர்களின் குடும்ப கஸ்டங்கள் நஸ்டங்கள் நன்மை தீமைகள் மகிழ்ச்சிகள் எல்லாம் அங்கு பரிமாறப்படும்.

அது வெறுமனே பாய் வியாபாரம் மாத்திரம் அன்று குடும்ப உறவுப் பரிமாறலும் கூட. இதனால் அவ்வூர்களிலிருந்த ஒவ்வொரு குடும்பத்தையும் அக்குடும்ப உறுப்பினர்களையும் அவர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளையும் கிறீன் காக்கா துல்லியமாக அறிந்திருந்தார். அவரது கனிவான கேட்டலும்

அவர் தனது அனுபவம் கொண்டு சொல்லும் ஆலோசனைகளும் அவர்களுக்கு மிக ஆறுதலாக இருந்தன. இதனால் சில குடும்பங்கள் கிறீன் காக்காவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும்.

ஒருதொகுதிப் பாய் விற்று முடிய மத்தியானம் ஆகிவிடும். மீண்டும் எமது வீடான தளப்பிரதேசத்துக்கு வருவார் பழையபடி எமது விறாந்தையில் விரிக்கப்பட்டிருக்கும் பாயிலிருக்கும் வெற்றிலை வட்டாவிலிருந்து பாக்கு எடுத்து வெட்டி வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி வெற்றிலைபோட ஆரம்பிப்பார். அவரது சிவந்த உதடுகள் மேலும் சிவக்கும். பக்கத்தில் துப்பல் சட்டி இருக்கும் அதில் துப்பிக்கொண்டே உரையாடுவார்.

அதற்கிடையில் அம்மா அவருக்கு மத்தியானச் சாப்பாடு தயாரித்து விடுவா. அவர் கேட்காமலேயே அது உருவாகிவிடும்.

அப்பா, கிறீன் காக்கா நான் அனைவரும் இருந்து மதிய உண்வு உண்போம்.

அப்பாவும் கிறீன் காக்காவும் நிறைய உரையாடிக்கொள்வார்கள். பின்னர் சிறிது நேரம் கிறீன் காக்கா பாயில் கண் அயர்வார். 2,00 மணிக்கு மீண்டும் இன்னொரு பாய்க்கட்டுகளை எடுத்துக்கொண்டு ஊருக்குள் இறங்கி விடுவார். பொழுதுபட 5.00 மணிக்கு மீண்டும் வீட்டுக்கு வருவார்.

புள்ள என்று கூப்பிட்டுக் கடப்படி கடக்கு முன்னரேயே அம்மா தேத்தண்ணிக் கோப்பையுடன் கிறீன் காக்காவை வரவேற்பார். வீட்டில் ஏதும் பலகாரங்கள் செய்திருந்தால் பார்சல் கட்டி கிறீன் காக்கா கைகளில் கொடுக்கப்படும். கிறீன் காக்காவும் ஒவ்வொருமுறையும் வரும்போது எமக்கு வீட்டுப் பலகாரங்கள் கொண்டு வருதல் வழமை. தமிழ்மக்களும் இஸ்லாமிய மக்களும் அன்று பெரும்பாலும் ஒரே விதமான பலகாரங்களையே செய்தனர்.

ஊரில் கூத்து நடந்தால் கிறீன் காக்காவுக்கும் ஓர் அழைப்பு இருக்கும். அவரும் களரிக்குள் ஏறி கூத்தருக்கு சால்வை அணிவார், பணப்பரிசுகள் கொடுப்பார். அவரிடம் வாங்கிய பாயைத்தான் கூத்துக்களரிக்குள் விரித்து அதன்மீது கும்பம் வைத்திருப்பார்கள். அவரிடம் வாங்கிய பாயில் அமர்ந்து கொண்டும் படுத்திருந்தும் கூத்துப்பார்ப்பார்கள்.

கூத்துப் பார்க்க ஊர்ப்பெரியவர்கள் அயலூர்ப் பிரமுகர்கள் வந்தால் அவர்கள் அமர கிறீன் காக்காவின் கலியாணப்பாய்தான் விரிக்கப்படும்.

எங்கும் நீக்கமற நிறைந்திருப்பார் இந்தக் கிறீன் காக்கா. ஊரில் அவர் பாய் விற்று காத்தான்குடி திரும்பும்போது பெரும்பாலும் அவர் கொணர்ந்த எல்லாப் பாய்களும் விற்கப்பட்டிருக்கும். அல்லது சிலர் கடனுக்கும் பாய் எடுத்திருப்பார்கள்.

மம்மல் சாய்ந்ததும் அதாவது பொழுது சாய்ந்ததும் தனது கரியர் கட்டிய றலி சைக்கிளில் ஏறி துருக்கித் தொப்பிய அணிந்தபடி ராஜகுமாரன் புரவியில் போவது போல காத்தான் குடிக்குப் பயணமாவார் கிறீன் காக்கா.

இவர் ஒரு உதாரணம் இவர்போல எத்தனையோ காத்தான்குடிக் காக்காமார் மட்டக்களப்பின் கிராமங்கள் தோறும் வியாபாரம் செய்துள்ளனர். துணி மணி தொடக்கம் சகல சாமான்களும் கிராமத்தில் தனித்து வாழ்ந்த தமிழ் மக்களின் காலடிக்குக் கொண்டு சேர்த்தவர்கள் இந்தக்காக்காமார்தான். அவர்கள் தமிழ் மக்களோடு இணைந்தும் பிணைந்தும் வாழ்ந்துள்ளனர். வியாபாரத்துக்கும் அப்பால் நம்பிக்கையான ஓர் உறவும் இருசாராரிடமும் அன்று நிலவியது. அந்த இணைப்பையும் பிணைப்பையும் அன்பையும் உறவையும் நினைத்தபடி வாழும் பல முதியவர்களை இன்றும் மட்டக்களப்புத் தமிழ்க் கிராமங்களில் காணலாம். இதேபோல காத்தான்குடிக்குள் சென்று இஸ்லாமிய மக்களுக்கு தமது வீட்டில் உண்டாக்கிய மரக்கறிகளையும் பாலையும் எருமைத் தயிரையும் தேங்காயையும் காத்தான்குடி இஸ்லாமிய மக்களுக்கு வியாபாரம் செய்தனர் தமிழ் வியாபாரிகள்.

தொடர்ச்சி... (பக்கம் -15)

# கிழக்கின் மாற்றுத் தலைமையாக பிள்ளையான்?

எழுவான் வேலன்



19.04.2019ம் திகதிய 60 வது அரங்கம் பத்திரிகையில், 'அரங்கம் பத்திரிகையில் இருந்து பிள்ளையானைச் சந்தித்தேன்' எனும் கட்டுரை அதன் ஆசிரியர் திரு.பூ.சீவகன் அவர்களுடைய பிரசுரமாகியிருந்தது. அதே கட்டுரையை தனது முகநூலிலும் பதிவு செய்திருந்தார். பத்திரிகைக் கட்டுரையின் பதிற்குறிகள் எவ்வாறு இருந்தது என்பது தெரியாது. ஆனால் முகநூலில் பலவாறான பதிற்குறிகளையும் கருத்துக்களையும் அவதானிக்க முடிந்தது. இந்த அவதானத்தின் அடிப்படையில் பிள்ளையான் தொடர்பான எனது அவதானத்தினை இப் பத்தியின் ஊடாக முன்வைக்க விரும்புகின்றேன்.

முகநூலில் வெளிப்படுத்தப்பட்ட பதிற்குறிகளும் கருத்துக்களையும் பின்வரும் வகையில் வகைப்படுத்த முடியும்.

1. பிள்ளையானை ஆதரிப்பவர்கள்

அ.மட்டக்களப்பு மண்சார்ந்து பிரதேசப்பற்றுடன் பிள்ளையானை ஆதரிப்பவர்கள்

ஆ.இதுவரையான மாகாண ஆட்சிக்காலங்களை விட பிள்ளையானுடைய ஆட்சிக்காலம் சிறந்தது எனும் அடிப்படையில் பிள்ளையானை ஆதரிப்பவர்கள்.

2. பிள்ளையானை எதிர்ப்பவர்கள்

அ. சனநாயகவாதிகள்
ஆ. விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள்
இ. யாழ் மேலாதிக்க சிந்தனையாளர்கள்
ஈ. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள்.

மட்டக்களப்பு மண்சார்ந்து பிரதேசப்பற்றுடன் பிள்ளையானை ஆதரிப்பவர்களும் இரண்டாவது வகைப்பாட்டினுள் வருகின்ற பிள்ளையானை எதிர்ப்பவர்களும் கிழக்கு மக்களின் தேவைகள் அவர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக உண்மையான புரிதல் உள்ளவர்களாக இருக்கிறார்களா என்பது சந்தேகமே.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கருணா பிரிந்தபோது மட்டக்களப்பில் பொதுமக்களிடம் கருணாவுக்கு பெரும் ஆதரவு அலை எழுந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த மக்கள் ஆதரவை மிக நிதானமாக அவதானித்த விடுதலைப் புலிகள் கருணாவுக்கு எதிராக முதலில் ஊடாக யுத்தத்தினையே ஆரம்பித்தனர். அதன் மூலம் மிக விரைவாக மட்டக்களப்பு மக்களை வெற்றி கொண்ட புலிகள் அடுத்ததாக இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தனர். இவை இரண்டிலும் தோல்வியடைந்த கருணா எடுத்த தவறான முடிவுகளும் அவருடைய தனிப்பட்ட ஒழுக்க நடத்தைகளும் மட்டக்களப்பு மக்கள் அவர் மேல் கொண்டிருந்த நம்பகத்தன்மையினை இழப்பதற்கு காரணமாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கருணாவுடன் கருணாவுக்கு நம்பிக்கையானவராக இருந்த பிள்ளையான் கருணாவுடன் முரண்பட்டுக்கொண்டு 'தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்' எனும் கட்சியுடன் வெளியே வருகின்றார். 2008ம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடைந்து மாகாணசபையின் முதல்வராகவும் ஆகின்றார்.

இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் புலிகளை ஆதரித்துக் கொண்டிருந்த மட்டக்களப்பு மக்கள் கருணாவையும் பின்னர் பிள்ளையானையும் ஆதரிப்பதற்கான காரணங்கள் என்ன என்பதாகும்.

எப்படி தமிழர்கள் சிங்கள பேரினவாதத்தினால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்களோ அதே போல் மட்டக்களப்புத் தமிழர்கள் யாழ் மேலாதிக்க தலைமைத்துவங்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழர்கள் என்ற ஒன்றுபடுதலின் அனைத்து நன்மைகளையும் அனுபவிப்பவர்களாக யாழ் மேலாதிக்கவாதமே இருந்து வந்திருப்பதை வரலாறு முழுக்க அவதானிக்க முடியும். இதற்கு எதிரான மாற்றுக்களை முன்வைப்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானதாகப் பார்க்கப்பட்டு துரோகிகளாக்கப்படுவதனால் தமிழ்த் தேசியத்தினை மானசீகமாக நேசித்து தமது சமூக அரசியல் பொருளாதார அபிலாசைகளை அடக்கி வைத்துக்கொண்டார்கள். இந்த நிலையில்தான் கருணாவையும் பின்னர் பிள்ளையானையும் தங்களுடைய சமூகப் பொருளாதார அரசியல் அபிலாசைகளின் பிரதிநிதிகளாகப் பார்த்தார்கள் அவற்றை அடைய முயன்றார்கள்/முயல்கிறார்கள் இதுவே பிள்ளையானுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரவுப் பலமாகும்.

இதனை விளங்கிக்கொண்டு பிள்ளையான் தொடர்பான மேற்படி எதிர்ப்பாளர்களின் கருத்துக்களுக்கு வரலாம். முதலில் சனநாயகவாதிகளை எடுத்துக் கொள்வோம். இவர்கள் வைக்கின்ற குற்றச்சாட்டு பிள்ளையான் ஒரு கொலைகாரன் சனநாயகத்துக்கு அவர் சரிவராது என்பதாகும். ஒருவர் மீதுள்ள குற்றம் சட்டரீதியாக நிரூபிக்கப்படாதவரைக்கும் அவர் நிரபராதி என்பார்கள் இதனால் இந்தக் குற்றச்சாட்டு சட்டத்துக்கு புறம்பானதாகும். இருப்பினும் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் சமூகத்தின் உயர் வர்க்கத்தினராக இருப்பதனையும் காணலாம். எல்லா இடங்களிலும் இந்த உயர் வர்க்கம் மக்களுடைய துன்ப துயரங்களில் பங்கெடுக்காது சொகுசு வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு தமது நலன் பேணுபவர்களை ஆட்சியில் அமர்த்துவதற்காக தங்களுடைய வர்க்க நலனுக்கு பாதகமானவர்களை விமர்சனம் செய்து ஓரங்கட்டுவதில் குறியாக இருக்கும். இந்த உயர் வர்க்கத்தினரால் சனநாயகவாதிகள், மனித உரிமைவாதிகள், பெண்ணியவாதிகள், என்ற பன்முகத்துடன் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் அவர்கள் எதிர்பார்த்த சனநாயகத் தன்மையுடன் நடந்துகொள்ளாது சனநாயகக் கொலைகாரர்களாகவும் அதிகார வெறிகொண்டவர்களாகவும் இருக்கின்ற பலரை உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். இந்த உயர் வர்க்கம் அவர்களின் சனநாயகப் படுகொலைகள் பற்றியும் அதிகாரவெறி பற்றியும் பொதுவெளியில் பேசாதது மட்டுமல்ல அவ்வாறானவர்களுடன் தங்கள் தேவைகளுக்காக ஒட்டி உறவாடவும் தயங்காதவர்கள். இதுதான் அவர்களின் சுயநல வர்க்க குணாம்சமாகும்.

சனநாயகவாதிகளாகவும் மனித உரிமைவாதிகளாகவும் அடையாளப்பட்டுக் கொண்டு ஆட்சியைப் பிடிப்பவர்கள் பின்பு அவற்றையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு கொலைகாரர்களாக மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதங்களையும் இந்த சனநாயகவாதிகளால் வழங்கமுடியாது என்பதே உண்மையாகும். இதனால் எந்தக் கொலைகாரனையும் ஆட்சியில் அமர்த்தலாம் என்பது பொருளல்ல. கொலைகாரனுக்கும் போராளிக்கும் இடையிலான வித்தியாசங்களை நாங்கள் விளங்கிக் கொள்ளல் வேண்டும். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற/இருந்த கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் பிள்ளையானை விட மிக மோசமான கொலைகளைச் செய்தவர்கள் என்பதை இவர்கள் மிக லாவகமாக மறந்து விட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள பல போராளித் தலைவர்களாக (அவர்கள் மொழியில் கொலைகாரர்கள்) இருக்கின்றவர்களை கேள்விகேட்காது விமர்சிக்காது அங்கீகரிக்கின்ற உயர் வர்க்கம் ஏன் பிள்ளையானை மட்டும் கொலைகாரனாகப் பார்க்கின்றது என்பதற்குள்தான் அவர்களுடைய அரசியல் இருக்கின்றது. அதாவது மட்டக்களப்பிலிருந்து உயர் வர்க்கத்தையும் யாழ் மேலாதிக்கத்தையும் மீறி ஒரு படிக்காத சிறுவர் போராளியாக இருந்த ஒரு பொடியன் முன்னுக்கு வருகிறானே என்கின்ற காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுதான் அதுவாகும்.

இங்கு பிள்ளையான் முதலமைச்சராக இருந்த போது ஒரு கொடுங்கோன்மையாளனாக தன்னை காட்டிக் கொள்ளாது மக்கள் நலநாட்டமும் சனநாயகப் பற்றும் செயல்திறனும் உள்ளவராகவே தன்னை வெளிக்காட்டியிருக்கின்றார். இதுதான் பிள்ளையானை மற்றவர்களிடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அம்சமாகும். இந்த அம்சம் இந்த சனநாயகவாதிகளை கலக்கமடைய வைக்கின்றது. எங்கே எமது வர்க்க நலனும் நாம் கோட்பாட்டில் மட்டும் பேணும் சனநாயகமும் செயல்திறனும் இல்லாமல் போய்விடுமோ என அஞ்சுகிறார்கள். இந்த அச்சம் பிள்ளையானை கொலைகாரனாக வெளிப்படுத்தவேண்டிய உளவியல் நிர்ப்பந்தத்தினை அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

அடுத்து, புலி ஆதரவாளர்கள், யாழ் மேலாதிக்க சிந்தனையாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் போன்றவர்களை எடுத்துக் கொண்டால் இந்த மூன்று வகைப்பாட்டினரும் சந்திக்கும் ஒரு புள்ளி தமிழ்த் தேசியம் என்பதாகும். இவர்கள் எல்லோரும் தமிழ் தேசியத்தை சிதைத்த ஒரு துரோகியாகவும், பிரதேசவாதியாகவுமே பிள்ளையானைப் பார்க்கிறார்கள். உண்மையில் தமிழ்த் தேசியத்தைச் சிதைத்தது கருணாவோ பிள்ளையானோ அல்ல இந்த விமர்சகர்களை விட அவர்கள் தமிழ்த் தேசியத்துக்காக தம்மை ஆகுதியாக்கப் புறப்பட்டவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. தமிழ்த் தேசியத்தைச் சிதைத்தது யாழ் மேலாதிக்க கருத்தியல் என்பதை இவர்கள் உணர மறுப்பது வேதனையான விடயமாகும்.

ஆயுதப் போராட்டத்துக்கு முன்பே யாழ் உயர் வேளாளர் தம்மைவிட சாதி குறைந்தவர்களையெல்லாம் வடமராட்சியான், தென்மராட்சியான், வலிகாமத்தான், தீவான், மட்டக்களப்பான், தோட்டக்காட்டான் என்று பிரதேச வேறுபாடு காட்டி அழைத்ததுடன் அவர்களை தம்மைவிடக் கீழானவர்களாகவுமே நோக்கினார்கள், நடத்தினார்கள். ஆயுதப் போராட்டம் இதனை தற்காலிகமாக மூடிமறைத்திருந்தாலும் தம்மைவிடக் கீழானவர்கள் தலைமைப் பதவிக்கு வருவதையோ பொறுப்புக்கள் எடுப்பதையோ விரும்பியவர்கள் அல்ல. தவிர்க்கமுடியாமலே சகித்துக் கொண்டார்கள். இந்த உள்முரண்பாட்டின் உச்ச வெளிப்பாடே கருணா பிளவு ஆகும். இதற்கு முன்பு மிதவாத அரசியலில் இருந்து மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சியை பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியை காலூன்ற வைத்த சொல்லின் செல்வர், முடிசூடா மன்னன் என்று அழைக்கப்பட்ட செ.இராசதுரை விலகிச்சென்றிருந்தார் என்பதை மறக்கக் கூடாது. இந்த உண்மையை யாழ் மேலாதிக்கம் உணர மறுக்கும் வரை தமிழ் தேசியம் உயிர்ப்புடன் இருக்க முடியாது என்பதே உண்மையாகும்.

மேலும் வடகிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசமாக இருந்த போதிலும் வடக்கின் சமூக, பொருளாதார, அரசியல் வேறு கிழக்கின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமை வேறு தமிழ் அரசியல் தலைமைகளும் போராட்ட தலைமைகளும் இரண்டுக்கும் ஒரே வகையான அரசியல் நடைமுறையினை கையாண்டதன் விளைவே கிழக்கு மக்கள் இன்று அரசியல் அனாதைகளாக்கப்படுவதற்குக் காரணமாகும். இதனையும் மேற்கூறிய மூன்று வகைப்பாட்டினரும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

கிழக்கின் அரசியல் யதார்த்தத்தினைப் புரிந்து கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் கூட கிழக்கில் தனியான அரசியல் நடைமுறையினைக் கையாள்வதற்கு வக்கற்றவர்களாகவே இருக்கின்றனர். இதற்குக் காரணம் அவ்வாறு தனியான அரசியல் நடைமுறையினைக் கையாளும் போது அது தங்களுடைய யாழ்ப்பாண அரசியல் இருப்பை பாதிக்கும் என அஞ்சுகிறார்கள். கிழக்கில் பிள்ளையானுடன் சேர்ந்து இயங்கும் கட்சியின் இருப்பு வடக்கில் கேள்விக்குறியாகும் என நினைக்கிறார்கள். எனவே இந்த அரசியல் கட்சிகள் வடக்கு மக்களைத்தான் கவனத்தில் கொள்கிறார்களே தவிர

தொடர்ச்சி... (பக்கம் -15)

# எறியப்படும் காலணியைப் பார்த்து புன்னகைத்தல்



கிரிக்கெட்டில் எனக்கு அத்தனை ஆர்வமில்லை. என்றாலும் நண்பர்களின் தயவில் சில நேரங்களில் போட்டித்தொடர்களைக் காணும் வாய்ப்புக் கிடைப்பதுண்டு. கடந்த வார இறுதியில் ஐபி.எல் இறுதிப்போட்டியையும் அப்படித்தான் காணும் வாய்ப்புக் கிடைத்தது. ஏதோ நினைவு தூண்ட அருகிலிருந்த நண்பனிடம் "போன ஆண்டு ஐ.பி.எல் போட்டியில் இடம்பெற்ற சப்பாத்து தாக்குதல் உனக்கு நினைவிருக்கிறதா?" என்று கேட்டேன். அவன் அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தான். "டேய்... இந்தா எண்ட மாதிரி இருக்குடா... நல்லா மறந்தே போய்ற்று என!"

போன ஆண்டு காவிரிப் போராட்டம் தமிழகத்தில் வெடித்திருந்த இதே காலப்பகுதியில் தான் குறித்த போட்டித்தொடரொன்றில் போராளிகளால் மைதானம் நோக்கி காலணிகள் வீசப்பட்டிருந்தன. விளையாட்டுலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய அந்த நிகழ்வு வெறும் ஓராண்டு காலப்பகுதியில் முற்றாக மறக்கப்பட்டுவிட்டது.

செய்திகள் எத்தனை வலிமையானவையோ அத்தனை பலவீனமானவை. தினம் தினம், கணம் கணம், நாம் செய்திகளின் அலைகளால் தாக்கப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறோம். ஒவ்வொரு செய்திக்கும் ஒவ்வொரு உணர்ச்சித்தூண்டல். சிலவற்றைக் கேட்கும் போது மகிழ்ச்சி. சில துக்கம், சில பெருங்கோபம், சில பெரும் நகைச்சுவை. அடுத்த சில நாட்களிலேயே அவை பொருளில்லாதவையாக மாறிவிடுகின்றன. அவற்றைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமில்லாமல், நாம் அன்றைக்கு நம்மை பலமாக அறைந்தபடி கடந்து செல்லும் வேறு செய்தியோடுமல் லுக்கட்டிக்கொண்டிருப்போம்.

தகவல் தொழிநுட்ப உலகின் மிகப்பெரிய எதிர்மறை விளைவு இது. இன்று தகவல் பரிமாற்றம் என்பது கணப்பொழுதுக்கும் குறைவான நேரத்தையே எடுக்கும் ஒரு செயல். இதில் முந்திய கணத்தை எண்ணி சந்தோசப்படுவதற்கோ, கவலைப்படுவதற்கோ அடுத்த கணம் நம்மை அனுமதிப்பதில்லை. அது வேறொரு உலகை நமக்குக் காட்டுகிறது. "காலம் வேகமாகச் செல்கிறது" என்று சலித்துக்கொள்கிறோம். காரணம் ஒன்று தான். நம் மீது பொழியும் தகவல்களை பகுப்பாய்வதற்குள் காலம் கடந்துவிடுகிறது. அவற்றில் 90 வீதமானவை நமக்கு எவ்வித பயனும் அற்றவை.

இந்த இடத்தில் தான் சமூக வலைத்தளங்கள் மிகப்பெரும் தீங்கை இழைக்கின்றன. பேஸ்புக், ருவிட்டர் முதலான சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் எல்லோருக்கும் தெரியும். பொதுவாக அங்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருப்பொருளில் உரையாடல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும். 'உரையாடல்கள்' என்பதை விட 'வெட்டிப்பேச்சு' என்ற சொல்லாடல் பொருத்தமாக இருக்கும். ஒரு தேநீர்க்கடையில், அல்லது உள்ளூர் மொழியில் 'கிழங்குக்கடையில்' நான்கைந்து பேரால் செய்யப்படுகின்ற வீண் அரட்டைகள் அவை.

## சும்மா இருங்கள் -- பூமியை ஆள பொறுமை வேண்டும்

இன்று அரசியல் பிரச்சினை, நாளை ஒரு சமூகச்சிக்கல், நாளை மறுநாள் ஒரு விளையாட்டு, அடுத்த நாள் ஒரு சர்வதேசப் பிரச்சினை, அதற்கும் அடுத்த நாள் சினிமா கிசுகிசு ஒன்று, பிறகொருநாள் யாரையாவது கிண்டல் செய்வது என்று தான் சமூக வலைத்தளங்களில் பெரும்பாலானவர்களின் நாட்கள் கழிகின்றன. இதன் பொருள் சமூக வலைத்தளங்களில் ஆரோக்கியமான விவாதங்களே இடம்பெறுவதில்லை என்பதல்ல. இடம்பெறுகின்றன. அவை எண்ணிக்கையில் மிகக்குறைந்தவை. அவற்றில் இரு பிரதிகூலங்கள் இருக்கின்றன. ஒன்று நான்கைந்து நாட்களின் பின் அந்த உரையாடல் மறக்கடிக்கப்பட்டு விடும். உரையாடலைத் தொடங்கியவரே அதில் பரிமாறப்பட்டுள்ள கருத்துக்களைப் பெறவேண்டுமென்றால், தேடிச் செல்லவேண்டிய கட்டாயம்.

இன்னொரு பிரதிகூலம், உரையாடல்கள் சிந்திப்பவர்களுக்கானவை. எனவே அவை தம்மை வாசிப்போரை கொஞ்சமாவது சிந்திக்கத்தூண்டும். சமூக வலைத்தளங்களுக்கு வருபவர்கள் அத்தனை ஆழமாக வாசிக்க விரும்புவதில்லை. எனவே பயனுள்ள உரையாடல்கள், பெருமளவு கவனிக்கப்படாமல் புறக்கணிக்கவும் படுகின்றன.

இது வெறும் குற்றச்சாட்டு அல்ல. சமூ கவலைத்தளங்களைபயன்படுத்துவோ ர்ஆழ்ந்தசிந்தனையிலிருந்துவிலகிச் செல்கிறார்கள்என்பதுநிரூபிக்கப்பட்டஉ ண்மை. இந்தக் கட்டுரையை வாசிக்கும் உங்களில் பலர் கூட, பேஸ்புக்கில் ஓரிரு வரிகளுக்கு மேல் எழுதப்பட்டிருக்கும் பதிவுகளை வாசிக்காமல் புறக்கணித்துச் சென்றிருக்கலாம். ஏனென்றால் வரிசையாக கேளிக்கைக்கும் பொழுதுபோக்குக்கும் காணொளிகளும் நகைச்சுவைத் துணுக்குகளும் காத்திருக்கும் போது, உங்களால் வாசிப்பதில் கவனம் செலுத்த முடியாது. சமூக வலைத்தள வாசிப்பு, இயல்பாகவே அத்தகைய குறுவாசிப்பு ஒன்றுக்கு மட்டுமே இடம் வைத்திருக்கும்.

சமூக வலைத்தளங்களால் ஏற்படும் இந்த ஆபத்தான வழக்கத்துக்கு நன்கு வாசிக்கும் பலர் கூட விரைவிலேயே அடிமையாகிவிடுகிறோம். உங்களால் இப்போது ஞாயிறு வாரமலர்

**வி.துலாஞ்சனன்**

பத்திரிகைகளை பழைய வேகத்தில், பழைய மன ஒருமைப்பாட்டுடன் வாசிக்க முடிகிறதா? ஒரு புத்தகத்தை பழைய அதே சரளத்துடன் வாசிக்க முடிகிறதா?

வாசிப்பு மிக முக்கியமான ஒரு அறிவியல் செயல்பாடு. மனிதன் ஒருவனின் தொடர்பாடல் திறனானது, முற்றிலும் மொழி சார்ந்தது. மொழி நான்கு செயற்பாடுகளால் கட்டுப்படுத்தப்படுகின்றது. பேசுதல், சிந்தித்தல், கேட்டல், எழுதுதல். வாசித்தலும் கேட்டலும் மொழி உள்வாங்கலுக்கு உதவ, பேசுதலும் எழுதுதலும் மொழி வெளிப்பாட்டுக்கு உதவுகின்றன.

தகவல் தொழிநுட்ப உலகு நமக்கு வாசித்தல், எழுதுதல் ஆகிய இரண்டு செயற்பாடுகளையும் மட்டுப்படுத்தி விட்டது. அது தனிமனித தொடர்பாடல் திறனில் இன்று மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தொடர்பாடல் திறனில் பாதிப்பு ஏற்பட்டால் கூட பரவாயில்லை. அது முற்றுமுழுதாக சிந்திக்கும் திறனை பாதித்திருக்கிறது. முன்பெப்போதும் இருந்ததை விட, மனிதர்கள் இப்போது அதிக உணர்ச்சிவசப்படுபவர்களாக இருப்பதையும், அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாவோராக இருப்பதையும், ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இதற்கு வேறு காரணங்கள் இருந்தாலும், மறுக்க முடியாத முக்கிய காரணம், இந்த சமூக வலைத்தளங்கள்.

ஐபிஎல் - தகவல் தொழிநுட்ப உலகு - சமூக வலைத்தளங்கள் என்று, ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத இந்த நீண்ட பிரசங்கம் எதற்கு என்று யோசிக்கிறீர்களா? வேறொன்றுமில்லை. இன்றைய நாட்டின் அசாதாரணமான நிலைமை.

கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளை அடுத்து ஏற்பட்ட நிலைகுலைவிலிருந்து இலங்கை இன்னும் முற்றாக மீளவில்லை. எல்லா இடங்களிலும் மெல்லிய அச்சமும் சந்தேகமும் பரவி இருக்கின்றது. இறுக்கமாகி இருக்கின்ற பாதுகாப்பு நடைமுறைகள் பலரையும் பொறுமையிழக்கச் செய்கின்றன. எப்போது நாடு பழைய நிலைக்குத் திரும்பும் என்பதே பலருக்கும் ஏக்கமாக இருக்கிறது.

இந்த நிலையில், நாட்டில் எங்கேனும் பதற்றநிலை ஏற்பட்டால் உடனே சமூக வலைத்தளங்களை முடக்கும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டுவருகிறது. சமூக வலைத்தளப் பயனர்கள் பலர் இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். "கண்ணாடியைத் திருப்பினால் ஆட்டோ எப்படி சேர் ஓடும்?" என்று திரைப்பட நகைச்சுவையை சொல்லி கிண்டலும் செய்கிறார்கள். உண்மையில் சமூக வலைத்தளங்களே வன்முறையைத் தூண்டும் அபாயகரமான சாதனங்கள். தேவாலயங்களில் உடல் சிதறிக் கிடந்த பச்சிளம் பாலகர்களின் சடலங்கள் சமூக வலைத்தளங்களில் தான் மிக வேகமாகப் பரவின. அவற்றைக் கண்டு உள்ளம் கலங்கி விம்மி அழாத ஒருவர் இங்கு இருக்க முடியுமா? அதே சூட்டோடு தான், இத்தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானின் வன்முறையைத் தூண்டும் பழைய காணொளிகள் சுற்றோட்டத்துக்கு விடப்பட்டன. மனித நேயம் கொண்ட எவரும் அவற்றைப் பார்த்து இரத்தம் கொதிக்காமல் இருந்திருக்க முடியுமா?

சமூக வலைத்தளம் முடக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களிலும் விபிஎன் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இளைஞர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். சாதாரணமாக ஐந்து நிமிடம் உள்நுழைந்து வெளியேறினாலே, அதில் குறைந்தது ஐந்து வன்முறையைத் தூண்டும் பதிவுகளைக் கடக்காமல் நம்மால் வரமுடியாமல் இருக்கிறது. நரம் புபுடைக்கச்செய்யும்வதந்திகள், குமட்டச் செய்யும் இனவாதக் கருத்துக்கள், வாழைமரத்தை வெட்டி எறி என்று இயல்பாகச் சொல்வது போல் குடும்பத்தோடு - சமூகத்தோடு வேரோடு பிடுங்கி எறி என்று கொக்கரிக்கும் மீம்கள், பதிவுகள். வாந்தி வருகிறது. விலங்குகள் கூட உணவுக்காக அல்லாமல் இரையைக் கொல்வதில்லை!

நாமெல்லாம் வெறும் உணர்ச்சி மிருகங்களாகி வருகிறோம். சிந்திக்கும் திறனை இழந்து வருகிறோம் என்பதற்கு இதை விட வேறென்ன சான்று வேண்டும்? குண்டுவெடிப்பு இடம்பெற்ற அதே நாளில், குருதிக்கொடை வழங்குவதற்காக நாடெங்கும் வைத்தியசாலைகளில் திரண்ட நம் மக்களை - குறிப்பாக இளைஞர்களைக் கண்டு உலகமே ஆனந்தக்கண்ணீர் மல்கியது. அதே உலகை முகம் சுளிக்கச் செய்யும் செயல்களை இன்று செய்கின்றவர்களும் இளைஞர்கள்தான். ஒருவேளைஅவர்களில்ஒருவன், அன்று குருதிக்கொடை வழங்க வரிசையில் நின்ற ஒருவனாகவும் இருக்கலாம்.

குண்டுவெடிப்பு, அதைத்தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை இதற்கெல்லாம் நாம் எத்தனையோ காரணங்களைச் சொல்லலாம், அரசியல் பின்னணி, சர்வதேச தலையீடு, வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி, உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மை என்று கூடியிருந்து ஆராயலாம். அதனால் எல்லாம் இப்போது எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இப்போது தேவையானது ஒன்று மட்டுமே. பொறுமை!

தீர்ப்புச் சொல் என்று கூறி, ஜனநாயக ஆட்சி தன் குடிமகனின் கைகளில் தராசை நீட்டுவது, தேர்தலின் போது மாத்திரமே. நீங்கள் எந்த அரசியல் சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர் என்றாலும், எந்த சமூக அந்தஸ்தில் இருப்பவர் என்றாலும், ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும், நீங்கள் ஒரு ஆணியைக் கூட பிடுங்க முடியாது. ஜனநாயகத்தின்கசப்பான உண்மை அது.

தொடர்ச்சி... (பக்கம் -15)

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 36

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. மாத்திரை என்றால் என்ன?

இயல்பெழும் மாந்தர் இமை நொடி மாத்திரை.

(நன். சூ. 100)

மனிதருடைய இயல்பான சுபாவத்தில் எழுகின்ற கண்ணிமைப் பொழுதை அல்லது கைந்நொடிப் பொழுதை மாத்திரை என்று கூறுவர்.

2. மாத்திரை அளபினைக் குறிப்பிடுக.

மூன்று உயிரளபு இரண்டாம் நெடில் ஒன்றே
குறிலோடு ஐ ஔ குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இ உ குறுக்கம் ஆய்தம்
கால்குறள் ம.்.கான் ஆய்தம் மாத்திரை.

(நன். சூ. 99)

(i) உயிரளபெடை - மூன்று மாத்திரை

(ii) நெடில் - இரண்டு மாத்திரை (உயிர் நெடிலாகவோ உயிர்மெய் நெடிலாகவோ இருக்கலாம்)

(iii) குறில் - ஒரு மாத்திரை (உயிரக் குறிலாகவோ உயிர்மெய்க் குறிலாகவோ இருக்கலாம்)

ஐகாரக் குறுக்கம் - ஒரு மாத்திரை
ஔகாரக் குறுக்கம் - ஒரு மாத்திரை
ஒற்றளபெடை - ஒரு மாத்திரை

(iv) மெய் - அரை மாத்திரை
குற்றியலிகரம் - அரை மாத்திரை
குற்றியலுகரம் - அரை மாத்திரை
ஆய்தம் - அரை மாத்திரை

(v) மகரக் குறுக்கம் - கால் மாத்திரை
ஆய்தக் குறுக்கம் - கால் மாத்திரை

குறிப்பு : (1) உயிர் எழுத்து, 12 ஆகும். இது குறில், நெடில் என்று இரண்டு வகைப்படும். குறிலுக்கு ஒரு மாத்திரை. குறில், தன்னிலையினின்றும் ஒலிக்கும், குறுகியும் ஒலிக்கும். மாறாக அது நீண்டொலிப்பதில்லை. தன்னிலையினின்று ஒலிக்கும் போது தனக்குரிய ஒரு மாத்திரையைப் பெறும். ஐந்து குறிலில் இகரமும் உகரமுமே குறுகி ஒலிக்கும். ஒரு மாத்திரையைக் கொண்ட குறில் அரைவாசியாகக் குறுகி ஒலிக்கும். எனவே, குறுகி ஒலிக்கும் இகரத்துக்கும் அதாவது குற்றியலிகரத்துக்கும் குறுகி ஒலிக்கும் உகரத்துக்கும் அதாவது குற்றியலுகரத்துக்கும் தனித்தனியே மாத்திரை அரை ஆகும்.

(2) நெடிலுக்கு இரண்டு மாத்திரை. நெடில், தன்னிலையினின்றும் ஒலிக்கும், நீண்டும் ஒலிக்கும், குறுகியும் ஒலிக்கும். தன்னிலையினின்று ஒலிக்கும் போது தனக்குரிய இரண்டு மாத்திரையைப் பெறும். ஏழு நெடிலில் ஏழு நெடிலும் நீண்டு அதாவது அளபெடுத்து ஒலிக்கும். இரண்டு மாத்திரையைக் கொண்ட நெடில், தனக்குரிய இரண்டு மாத்திரை அளபுடன் ஒரு மாத்திரையைச் சேர்த்து மூன்றாக அளபெடுத்து, தன் மாத்திரையிலிருந்து கூடி ஒலிக்கும். அதாவது உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று ஆகும்.

ஏழு நெடிலில் ஐகாரமும் ஔகாரமுமே குறுகி ஒலிக்கும். இரண்டு மாத்திரையைக் கொண்ட நெடில் அரைவாசியாகக் குறுகி ஒலிக்கும். எனவே, குறுகி ஒலிக்கும் ஐகாரத்துக்கும் அதாவது ஐகாரக் குறுக்கத்துக்கும் குறுகி ஒலிக்கும் ஔகாரத்துக்கும் அதாவது ஔகாரக் குறுக்கத்துக்கும் தனித்தனியே மாத்திரை ஒன்று ஆகும்.

(3) மெய்க்கு அரை மாத்திரை. அதே போல் ஆய்தத்துக்கும் அரை மாத்திரை. இவை இரண்டும் அதாவது மெய்யும் ஆய்தமும் தன்னிலையினின்றும் ஒலிக்கும், கூடியும் ஒலிக்கும், குறுகியும் ஒலிக்கும். தன்னிலையினின்று ஒலிக்கும் போது தமக்குரிய அரை மாத்திரையைப் பெறும். மெய் 18 ஆகும். இந்தப் 18 மெய்யும் குறுகி ஒலிப்பதில்லை. 'மகரம்' மட்டுமே குறுகி ஒலிக்கும். அரை மாத்திரையைக் கொண்ட மெய், அரைவாசியாகக் குறுகி ஒலிக்கும். எனவே, குறுகி ஒலிக்கும் மகரத்துக்கு அதாவது மகரக் குறுக்கத்துக்கு மாத்திரை கால் ஆகும்.

ஆய்தத்துக்கு அரை மாத்திரை. அது குறுகி ஒலிக்கும். அரை மாத்திரையைக் கொண்ட ஆய்தம், அரைவாசியாகக் குறுகி ஒலிக்கும். எனவே, குறுகி ஒலிக்கும் ஆய்தத்துக்கு அதாவது ஆய்தக் குறுக்கத்துக்கு மாத்திரை கால் ஆகும்.

(4). மெய், கூடி ஒலிக்கும் போது ஒற்றளபெடை என்று பெயர் பெறும். அவ்வாறே ஆய்தம் கூடி ஒலிக்கும் போதும் ஒற்றளபெடை என்றே பெயர் பெறும். இந்த மெய்யும் ஆய்தமும் இங்கு 'ஒற்று' என்று அழைக்கப்படுகிறது.

# கற்போம்

18 மெய்யும் கூடி ஒலிப்பதில்லை. ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள ஆகிய 10 மெய்களே கூடி ஒலிக்கும். அரை மாத்திரையைக் கொண்ட மெய், கூடி ஒலிக்கும். எனவே, கூடி ஒலிக்கும் இந்தப் 10 மெய்களும் தனித்தனியே ஒரு மாத்திரை பெறும். ஆய்தம் ஒன்றுதான். ஆய்தம் கூடி ஒலிக்கும் போது தனியே ஒரு மாத்திரை பெறும். ஆக, இந்தப் 10 மெய்களும் ஆய்தம் ஒன்றுமாக ஒற்றளபெடை 11 ஆகும்.

## இது போன்ற தரு வருமோ?

முகத்துவா ரம்தொட்டு மோர்சாப் பிட்டிவரை
முன்னேறும் பாதையிலே முன்னாளில் நட்டுவைத்தார்
முகம்தெரியா வெளிநாட்டார் நிழல்வாகை மரங்களையே
மாட்டுவண்டி குதிரைவண்டி கால்நடை மக்களுக்காய்
சுகமாகப் பயணத்தில் நிழலாறிக் கிடந்துசெல்ல
சந்திக்கொரு மரமொன்று சிந்தித்துச் செயலாற்றி
இகத்தையே வளமாக்க இயற்கையோ டிணைந்துவாழ
இகந்தரும் விருட்சமதை எப்படித்தான் வளர்த்தாரோ

அரசடிச் சந்திநின்று ஓராங் கட்டைதனை
அசையாமல் நின்றுபார்க்க குகைபோன்று நிழல்வாகை
மரமெல்லாம் கூடாரம் மனமெங்கும் உருவாகும்
மத்தியான வெயில்கூட மாருத மாயாகும்
அருமந்த விருட்சமதை ஆண்டுபல கண்டதுவை
அபிவிருத்தி எனும்பேரில் அடியோடு அழிந்துவிட
தெருவகட்டும் போர்வையிலே தன்பாட்டில் தான்வளர்ந்த
தருவெல்லாம் வெட்டிச்சுடு காடாக ஆக்கிவைத்தோம்

அப்படியும் அதிலொன்று எப்படியோ தப்பிநின்று
ஆஞ்சநேய குலம்வளர அதிகாண்டு முன்னின்று
இப்படியும் சேவைசெய்ய எம்மாலே முடியுமென்று
ஈங்கெமக் கறிவுறுத்திக் கம்பீரமாய் நின்று
அப்பாடி எம்மனதில் பலநினைவைத் தான்தந்து
அசையாமல் நின்றதரு அப்படியே தலைசாய்ந்து
எப்படித்தான் வீழ்ந்ததுவோ ஏக்கமுடன் பலநெஞ்சம்
ஏங்கியே நிற்கவினி யிதுபோன்ற தருவருமோ ?

திரு. சிவலிங்கம்,
ஓய்வுநிலை தொழினுட்ப உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

## மீண்டும் தொண்ணூறுகள்

யாஸின் அரபாத்,
வாழைச்சேனை

மதிய நேர
மப்பும் மந்தாரமுமான வானம் பசியை
புறந்தள்ள..
மாலை நேர
இடி மின்னலுடனான மழைக்காற்று
சுகமாய் அச்சமூட்ட..
ஜன்னலோர பயணமும் வழிநெடுகே
உதிர்ந்துள்ள இலைகளும்
மனதை ரம்மியமாக்க
சாலை இரு புறமும்
இராணுவமும்
இடை நடுவே சோதனைகளும்
தொண்ணூறுகளுக்கே மீண்டும்
சென்றுவிட்டோமோ என்று எண்ணிய
போது
மணி காட்டும் கோபுரங்களும்
மின்னுகின்ற விளக்குகளும்
வெட்டப்பட்ட மரங்களும்
அங்கு முளைத்திருக்கும்
கட்டடங்களும்
நினைவூட்டியது
தொண்ணூறுகளைக் கடந்து வந்து
கனகாலம் ஆனதென்று..

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 4

### அனர்த்தங்களுக்குப் பின்னரான உளநலக் கோளாறுகள்

'உயிர்ப்புத்தின குண்டு வெடிப்பு நிகழ்ந்து ஒரு மாதம் அண்மிக்கும் நிலையில், இதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட, மறைமுகமாக பாதிக்கப்பட்ட மக்கள் படிப்படியாக வழமைக்கு, இயல்பு நிலமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். குண்டு வெடிப்பை ஏற்படுத்திய குண்டுதாரி, வெடிப்பில் பலியானவர்கள் இன்று எம்முடன் இல்லை. அவர்கள் மீளாத்துயிலில், காயப்பட்டவர்களும், உயிரிழந்தவர்கள் குடும்பங்களும் எங்களுள் ஒருவராக உள்ளனர். இந்த ஒரு மாத காலத்தில் இதனால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள், சம்பவங்களை நேரடியாக கண்டவர்கள், சம்பவ இடத்தில் இருந்தவர்கள், காயப்பட்டவர்களுக்கு உடனுதவி செய்தவர்கள், இறந்தவர்களின் உடல்களை ஒன்று சேர்த்து எடுத்தவர்கள், வைத்தியசாலையில் நேரடியாக பணியாற்றிய சுகாதார துறையினர், இவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் என பலர் கண்கண்ட சாட்சியளாக உள்ளனர். இவர்களது மனதில் இவை நாட்பட்ட 'வடுக்களாக' பதியப்பட்டிருக்கும். மனிதனால் மேற்கொள்ளப்பட்ட இவ்வனர்த்தங்களின் தொடர்நிகழ்வுகளில் இருந்து மீளுவதற்கு அவர்களுக்கு குறிப்பிட்ட காலம் தேவைப்படும். இதில் சிறு தொகையினர் ஏதாவது உளநலக் கோளாறுகளால் கூடப் பாதிக்கப்பட்டிருக்கலாம். பாதிக்கப்பட்டுள்ள எம் மக்களுக்கு உளநல சேவைகளின் உதவியை பெற்றுக் கொடுக்க அனர்த்தங்களுக்கு பிற்பட்ட பொதுவான உளநலக் கோளாறுகளையும், அவற்றின் அறிகுறிகளையும் அறிந்து வைத்திருப்பது அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தவர்க்கும் உதவி செய்வதற்கு ஏதுவாக அமையும்.

### இழவிரக்கம். (Grief)

நெருங்கிய பிணைப்புகளுடைய, அன்புக்குரிய ஒருவரின் இறப்பை தொடர்ந்து உளரீதியாக ஏற்படக்கூடிய எண்ணங்களும், உணர்ச்சிகளும், நடத்தைகளும் இழவிரக்கம் எனும் சொல்லால் விவரிக்கப்படுகின்றது. நிரந்தரமாக ஒருவரை பிரிந்தால் ஏற்படுகின்ற இழவிரக்கமானது அதிர்ச்சி, நம்பமுடியாத நிலமை, உணர்வுகள் மரத்துப்போன நிலமை, அதிக கவலை போன்ற ஆரம்ப அறிகுறிகளையும், அழுதல், வருந்துதல், நினைவுகளில் மூழ்கி இருத்தல், கனவுகள் காணுதல், குற்ற உணர்வுகள், கோப உணர்வு, பழிவாங்கும் உணர்வு போன்றவற்றால் துன்புறுதல், எதிர்காலம் பற்றி பயப்படுதல், நித்திரை குழப்பத்தை அனுபவித்தல். போன்ற இடைப்பட்ட அறிகுறிகளையும், படிப்படியாக இழப்பை ஏற்றுக் கொள்ளுதல், இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதல் போன்ற இழவிரக்கம் முற்றுப்பொறும் அறிகுறிகளையும் கொண்டிருக்கும். பொதுவாக இவ்விழவிரக்க படிமுறைகள் முழுமையாக இல்லாமல் போவதற்கு ஆறுமாதம் தொடக்கம் ஒரு வருடம் வரையில் எடுக்கலாம். ஆயினும் ஏற்பட்ட அனர்த்தங்களில் குறிப்பாக மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள், குண்டு வெடிப்புக்கள், நேரடி துப்பாக்கிச்சூடு போன்ற அனர்த்த வடிவங்களும், அவற்றின் காட்சிகளும், இப்போது சாட்சிகளாய் உள்ள நெருங்கிய உறவினர்களிடையில் கொண்டிருக்கும் உறவு முறை, ஒரு கிறீஸ்தவ சமூகமாக அவர்களிற்கிடையில் இருந்த கூடிய ஒற்றுமை, அன்னியோன்னியம், இருப்பவர்களின் மீள்திறன் ஆளுமைக்கூறுகள், அவர்களுக்கு கிடைக்கின்ற குடும்ப, சமூக, உளசமூக, ஆன்மீக ஆதரவுகள் போன்ற பல்வேறு காரணிகள் இழவிரக்க படிமுறைகளை சிக்கலாக்கி விடலாம். இழவிரக்கம் எதிர்பார்கக்கூடிய சாதாரணமான உள வெளிப்பாடுகள் என்பதனை புரிந்து கொள்வதுடன், பாதிக்கப்பட்ட நபர் சாதாரண இழவிரக்கப் படிமுறைகள் ஊடாக பயணிப்பதையும் ஊக்குவிக்க வேண்டும். அவரை, அவரது இழப்பைப்பற்றி கதைப்பதற்கு, அழுவதற்கு, ஒப்பாரி சொல்லுவதற்கு,



மார்பு தட்டி அழுவதற்கு, சமயக் கிரியைகள், செலவு வீடு, அந்திரட்டி கிரிகைகள், பொதுவான வணக்க பிராத்தனைகள், பைபிள் வாசிப்பது, மீண்டும் ஆலய வழிபாடுகளுக்கு செல்வதற்கு உதவுதல், வைத்திய சாலையில், வீடுகளில் உள்ள

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

காயப்பட்டவர்களுடன் கதைப்பதற்கு ஊக்குவிப்பதோடு அவர்களின் போக்குவரத்திற்கும் உதவி செய்வது பயனுள்ள உளவியல் முதலுதவியாகும். பொதுவாக அனர்த்தங்களை தொடர்ந்து பல்வேறு அமைப்புக்கள், தனியார்கள், அரசு துறையினர் குறிப்பிட்ட காலத்திற்கு ஓடித்திரிந்து உதவுவதுடன் நிறுத்திக் கொள்வார்கள். அதனால் எந்த நீண்டகாலப் பலனும் ஏற்படப்போவதில்லை. மாறாக குறைந்தது ஒரு வருடத்திற்கு அதாவது பாதிக்கப்பட்டு மீழமுடியாதவர்களுக்கு உளவள உதவிகளை செய்வதற்கான சரியான திட்டமிடல், நடைமுறை செயற்பாடுகள் தேவை. இவற்றை மாவட்ட, உளசமூக ஒருங்கிணைப்பு குழுமூலம் செயற்படுத்தி நடைமுறைப்படுத்துவதோடு மாதமொருமுறை கட்டாயமாக ஆளணியினர் கூடி கதைத்து அவற்றின் அறிக்கைகளை வெளிக்கொணர்ந்து ஆவணப்படுத்தப்பட வேண்டும். சுனாமியின் பின்னாக ஏற்பட்ட அக்கட்டமைப்புக்கள் பின் காற்று இறங்கி மீண்டும் காற்று ஏற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு கடந்தகால அனுபவங்களை பாடமாக கொள்ள வேண்டும். சிலரின் சாதாரண இழவிரக்கம் நோயறிகுறிகளாக உருவாகலாம். தற்கொலை செய்தல், நாளாந்த செயற்பாடுகளில் ஆர்வமில்லை, மிகையான குற்ற உணர்வு, தனிமைப்படல், தனித்திருத்தல், ஒருவருடனும் கதைக்காமல் இருத்தல், மாயப்புலன் உணர்வுகள் போன்றவை காணப்படுமிடத்து, இவர்களுக்கு கட்டாயம் உளநல மருத்துவரின் ஆலோசனை, குறிப்பிட்ட காலத்திற்கு மருந்துகள் தேவைப்படும். எனவே அவர்களை கட்டாயம் அண்மையிலுள்ள உளநல சிகிச்சைப்பிரிவுக்கு அழைத்துச் செல்வது பயனுள்ள இடையீடாகும்.

### பொது நினைவுத்தூபி அஞ்சலி

உயிர்ப்புதின குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களிற்கான தீப, தூப, மலர்அஞ்சலிகள் மட்டக்களப்பு உட்பட இலங்கைத் தீவு முழுவதும் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அஞ்சலிப் பதாகைகள், கறுப்பு வெள்ளை நிற சோடனைகள், வாழைமரங்களை வெட்டி கட்டுதல் என மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் என்ற வேறுபாடு களைந்து அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டது இறந்தவர்களை உயிர்ப்பித்து கொடுக்க முடியாவிட்டாலும் உங்களுள் ஒருவராக உங்கள் குடும்பங்களில் உள்ளோம் என்பதை தெளிவாக காட்டுகிறது.

இழவிரக்கச் செயற்பாடுகள் சரியான முறையில் அமைந்து தங்கள் உறவுகளான பெற்றோரை, பிள்ளைகளை, உறவினர்கள், நண்பர்கள், சகோதரர்கள், சகோதரிகளை பறி கொடுத்தவர்கள் ஒன்றாக அழுது புலம்பி, மார்பு தட்டி, ஒப்பாரி சொல்லி தங்கள் மனதை தேற்றிக் கொண்டு இயல்பு நிலைக்கு திரும்ப பொதுவான ஒன்று கூடல் அதாவது பாதிக்கப்பட்ட மக்கள் அந்த நாட்களில் ஓரிடத்தில் இருந்து இவற்றை செய்வதற்கு பொது நினைவிடம், பொதுத் தூபி அமைத்தல் மிகவும் தேவையானது.

### நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோய்

மனிதக் குண்டுகள், குண்டு வெடிப்புக்கள், பின்னர் ஏற்படும் தீ விபத்துக்கள், கட்டிடங்கள் உடைந்து விழுதல் போன்ற அணமைக்கால், தொடூரமான, ஆபத்தான சம்பவங்கள் மற்றும் பயங்கர அனுபவங்களின் பின் ஏற்படுகின்ற உளவியல் குணங்குறிகளை நெருக்கீட்டிற்கு பிற்பட்ட மனவடு நோய் எனலாம். இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் PTSD எனப்படும் என்றில்லை சிலரில் கூடுதலாக ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இவ்வாறு PTSD ஏற்பட்டவர்களில் நடந்த பயங்கர அனுபவங்களை; மீண்டும் மீண்டும் சிந்தித்தல், தொடர்சியாக சிந்தித்தலை நிறுத்த முடியாது இருத்தல், நிகழ்வுகளின் மீளோட்டம், அந்நிகழ்வுகள் திரும்பத் திரும்ப நிகழ்வது போன்ற அனுபவம், நடந்த சம்பவங்களின் காட்சிகள், மரணங்கள், அருவருக்கத்தக்க வாசனைகள், ஒலிகள், ஓசைகள், அலறல் சத்தங்கள் போன்ற அந்த இடத்து காட்சிகள் ஒரு படம் ஓடுவது போல விழிப்பாய் உள்ள போதும் மீண்டும் மீண்டும் ஏற்படலாம். அத்துடன் கனவுகள் மீள, மீள ஏற்படுதல், பாதிக்கப்பட்ட, துன்பமான அனுபவங்களை ஞாபகப்படுத்தும் நிலைமைகளை அல்லது உரையாடல்களை தவிர்த்துக் கொள்ளுதல் இலகுவாக நிலை தடுமாறி விடுவர்.

அத்துடன் நாட்கள் நகர இவை தீவிர மனச் சோர்வு, தற்கொலை ஈடுபாடு போன்றவற்றிலும் முடியலாம். இவ்வாறான நிலையில் உளநல மருத்துவ உதவியுடன் குறிப்பிட்ட காலத்திற்கு மருத்துவ, மருத்துவமற்ற சிகிச்சைகளும் தேவைப்படும்.

### உளச்சோர்வு / மனச்சோர்வு நோய்

கடுமையான மனச்சோர்வு நோயினால் பாதிக்கப்பட்டர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். மனச்சோர்வு மிகப்பரவலாக காணப்படும் ஒரு முக்கிய உள நோய் ஆகும். இது சில வேளை தற்கொலைக்கும் இட்டுச்செல்லும். மனச்சோர்வின் குணங்குறிகள் பொதுவாகப் பல்வேறு விதமான இயலாமைகளாய் வெளிப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக படிக்கஇயலாமை, வேலை செய்ய இயலாமை, விளையாட இயலாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அன்புக்குரிய குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் ஒருவரின் இழப்பு (இழவிரக்கம்), வீடு, வாசல் மற்றும் சொத்து இழப்புக்கள், கடும் வறுமை, வேதனை தருகின்ற அல்லது ஆயுட்காலத்தை குறைக்கின்ற நாட்பட்ட மோசமான நோய்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை போன்றன மனச்சோர்வுக்குரிய மிகப் பொதுவான காரணங்களாகும்.

### மனச்சோர்வின் பொதுவான குணங்குறிகளாவன

கவலையில் மூழ்கியிருத்தல், சோகத்தில் ஆழ்ந்திருத்தல், இலகுவில் அழுதல் அடிக்கடி அழ வேண்டும் போலத் தோன்றுதல், தொடர்ச்சியாக யோசித்தபடி இருத்தல், எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை (விரக்தி), தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கைக் குறைவு, வாழ்க்கையில் சந்தோஷமின்மை , உதவியற்றநிலை (கையறு நிலை), தான் பிரயோசனமற்றவர் என்ற நினைப்பு (ஒன்றுக்கும் உதவாமல் போன நிலை, மற்றவர்களுக்குச் சுமையாக இருத்தல், தனக்குத்தானே தீங்கு செய்யும் மனநிலை - தற்கொலை எண்ணங்கள், இறப்பு பற்றிய, தற்கொலை பற்றிய எண்ணங்கள் (நித்திரை குழப்பம், நித்திரையின்மை - வழமையாக எழும் நேரத்திலும் முன்னராக எழும்புதல் ஆனால் படுக்கையை விட்டு எழுந்து வேலை செய்ய மனமின்மை. பசியின்மை. உடல் மெலிவு. பாலுறவில் நாட்டமின்மை. இலகுவில் களைப்படைதல், பலவீனமாக இருத்தல் (இயலாமை).கருத்தூன்றல், ஞாபகசக்தி, என்பவற்றில் குறைபாடு (மறதிக்குணம்). முன்னர் விருப்பமாக செய்த விடயங்களை செய்யமுடியாமை.தலையிடி, நெஞ்சு நோ, கைகால் உளைவு, உடம்பு முழுவதும் எரிதல் போல உணருதல் போன்ற நாட்பட்ட மெய்ப்பாட்டு முறைப்பாடுகள்.

### தற்கொலை செய்யும் எண்ணத்தில்

மனச்சோர்வுடைய சிலர் நோயின் கடுமையினால் எதுவும் கதைக்காமல், ஒன்றிரண்டு ;முறைப்பாடுகளைக் கூறுவதுடன் நின்று விடுவர். இவர்கள் உண்மையிலேயே தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் அளவிற்கு ஆபத்துமிக்கவர்கள். நோயாளியுடனான முதற் சந்திற்பின் போதே, அவர் தற்கொலை செய்யும் எண்ணத்தில் இருக்கிறாரா? என்பதை கண்டறியவும், தற்கொலை எண்ணத்தை அறிவது தற்கொலைக்கு இடடுச்செல்லும் என்ற எண்ணம் தவறானது.

இவ் வகைபட்ட தவறான நம்பிக்கைகளை அவர் கொண்டிருக்கிறாரா என்பதைப்பற்றி, அவர்களது குடும்ப உறுப்பினர்களைக் கேட்கவும். சில வேளைகளில் இவ்வாறான போலி நம்பிக்கைகள, அவரது உடல் சம்மந்தமானதாகவும் இருக்கலாம். உதாரணமாகத் தனக்குப் புற்று நோய் வந்துவிட்டது என்று எந்தவித ஆதாரமும் இன்றி அவர் நம்பலாம்.நோயாளர்களிடம் மாயப் புலனுணர்வகள், போலி நம்பிக்கைகள் என்பன மேலோங்கிக் காணப்படுமிடத்து, அவர்கள் உளமாய நோய்க்குட்பட்டிருக்கக் கூடிய சாதிதியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் மறந்துவிடலாகாது. சில வேளைகளில் உளமாய நோய்கள் மனச்சோர்வின் அறிகுறிகளுடனும் தொடங்கக்கூடும்;. மாறாக இவர்கள் 'உளமாய மனச்சோர்வு' என அழைக்கப்படும். கடுமையான, அவசரமாகச் சிகிச்சையளிக்கப்படவேண்டிய உளநோயினால் பாதிப்புற்றும் இருக்கலாம். இவ்வாறான நிலைகளில் உளமருத்துவ உதவியை உடனடியாக நாடுவது நன்று.

தொடர்ச்சி...

## மூளைக்குள் இருப்பது வாளும் குண்டுகளும் பின்னால் இருப்பது வர்த்தக நலன்கள்

என்றும் மிகவும் உணர்ச்சிகரமான வன்மமான தொனியில் அறிவித்துச் சென்றனர். வெள்ளத்தாளில் சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்ட இத்துண்டுப் பிரசுரத்தைப் பார்த்தவர்கள் பலர். பல கேள்விகளை எழுப்பினர். ஆனால் உரத்துப் பேச பயந்தனர். சிலரோ இதைச் சரிதான் என்றனர். இவர்களில் மூளைக்குள் வாளையும் குண்டையும் மட்டும் வைத்திருக்கும் புத்திசீவிகளும் அடங்குவர்.

இதனை தொடந்து மே 4ஆம் திகதி இணையத்தளச் செய்தி ஒன்றில் திருக்கோவில் பிரதேச சபை முஸ்லிம் வர்த்தக நிலையங்களை தற்காலிகமாக மூடுவது எனத் தீர்மானம் நிறைவேற்றியது என்ற செய்தி..

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச சபையின் சமீபத்தைய 14வது அமர்வில் முஸ்லிம் வர்த்தகர்களை ஊருக்குள் அனுமதிப்பதில்லை எனவும் வர்த்தக நிலையங்களை தற்காலிகமாக மூடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆரையம்பதி செய்திகளைக் கொண்டுவரும் ஆரையம்பதி.எல்கே இணையத்தளச் செய்தியின்படி ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் இத் தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்தபோதிலும் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் தீர்மானத்தை நிறைவேற்றினர். முஸ்லிகளின் பாதுகாப்புக்காக என்று காரணம் கூறிய போதிலும் பாதுகாப்பை வேறுவகையில் ஏற்படுத்தக் கூடிய வழிவகைகளை கலந்துரையாடி தீர்வுகாண முடியாதவர்களின் மண்டைக்குள் நிறைந்திருப்பது வாளும் குண்டும் மாத்திரமல்ல. காசுக் கட்டுக்களும் தான் எனச் சொல்லாமல் இருக்க முடியுமா?

தொடர்ச்சி...

## 'ஊடகத்துறைக்கு மீண்டும் ஆபத்து'

தொடர்புள்ளவர் என்ற சந்தேகமும் உள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச "டிரிபோலி படையணி" என்ற இராணுவ புலனாய்வு பிரிவொன்றை மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இயக்கினாரெனவும் அந்தப் படையணியே பத்திரிகையாளர்களை தாக்குவது, கொலை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிந்ததாகவும் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா, அமெரிக்காவின் கலிபோர்னிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும் அந்தக் குழு கூறியுள்ளது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள பிரபாத் புலத்வட்டே மீண்டும் இராணுவ புலனாய்வுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை இலங்கைப் பத்திரிகைத்துறைக்கு ஆபத்தானதென பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## இப்படியும் ஒரு காலம் நிலவியது...

இவ்வண்ணம் இஸ்லாமிய மக்களுக்கு உதவிகள் செய்து வியபாரம் செய்து அவர்களோடு பிணைந்து வாழ்ந்த பல தமிழ் மக்களை இன்றும் காத்தான்குடி முதியவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். இளம் தலைமுறைக்குக் கூற இஸ்லாமிய முதியவர்களிடமும் ஆயிரக்கணக்கான கதைகள் உள்ளன. தமிழ் முதியவர்களிடமும் ஆயிரக்கண்க்கான கதைகள் உண்டு.

அக்கதைகள் யாவும் அந்த இனிமையான காலத்தில் வாழ்ந்த தமிழ் முதியவர்களாலும் இஸ்லாமிய முதியவர்களாலும் இன்றைய தமிழ்- இஸ்லாமிய இளம் தலைமுறைக்குச் சொல்லப்படவேண்டிய காலம் இது. வாய் திறவுங்கள் சொல்லுங்கள். நல்லனவற்றையே பேசுவோம் நல்லனவற்றையே நாடுவோம். இந்தப் பாய்க்காரக் கிறீன் காக்கா தனக்கு வருத்தம் வந்தால் போகும் இடம் ஒன்று இருந்தது. அதுதான் அமிர்தகளியிலிருந்த விவாசிப் பரிசாரியாரின் வைத்தியக் கொட்டில்.

அமிர்தகளியில் வாழ்ந்த வினாசித்தம்பியாகிய வினாசிப் பரிசாரி யாருக்கும் காத்தான்குடி வாசியான யூசுப் ஹாஜியாராகிய ஈசிப்பாசியாருக்கும் ஒரு நெருக்கமான உறவு இருந்தது சுவராஸ்யமான உறவு அது

( தொடரும்)

தொடர்ச்சி...

## ஐந்தாவது உலகக் கிண்ணம்1992



நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, பங்களாதேஸ், கென்யா, நெதர்லாந்து, நமீபியா மற்றும் கனடா ஆகிய 14 அணிகள் விளையாடியிருந்தன.

குழுநிலை மற்றும் சுப்பர்-6 போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா, இலங்கை மற்றும் இந்தியா, கென்யா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானதுடன் இறுதிப் போட்டிக்கு இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தெரிவாகின. இத்தொடரில் பங்கு பற்றிய டெஸ்ட் அந்தஸ்து கூட பெறாத கென்யா அணி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானமை ஆச்சரியமானதும் குறிப்படத்தக்கதுமான ஒரு விடயமாகும்.

மார்ச் 23 அன்று ஜொகன்னர்ஸ் பேர்க், வொன்டரர்ஸ் மைதானத்தில நடைபெற்ற இறுதிப் போட்டியில் ரிக்கி பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை 125 ஓட்டங்களால் வெற்றிகொண்டு தமக்கான மூன்றாவது உலகக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 140 ஓட்டங்களை பெற்ற ரிக்கி பொன்டிங் தெரிவானதோடு தொடர் ஆட்ட நாயகனாக தொடரில் மொத்தமாக 673 ஓட்டங்களையும் 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றிய சச்சின் டெண்டுல்கர் தெரிவானார்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## கிழக்கின் மாற்றுத் தலைமையாக....

கிழக்கு மக்களை அல்ல என்பதும் கவனத்தில் எடுத்தக்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயத்தினையும் பிள்ளையான் தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்பவர்கள் விளங்கிக் கொள்வதாக இல்லை.

முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கு மாகாண ஆட்சியினையும் பின்னர் கிழக்குமாகாண ஆளுநர் நியமனத்தில் எதுவும் செய்யமுடியாத தமிழ் அரசுக் கட்சியினர் தேவாலயக் குண்டு வெடிப்பில் உண்டான முஸ்லிம் வெறுப்புணர்வை தங்கள் அரசியல் இலாபத்துக்காக, இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கும் ஹிஸ்புல்லாவின் வெலிக்கந்த பல்கலைக் கழகத்துக்கும் காணிவழங்கியது பிள்ளையானும் அவரைச் சேர்ந்தவர்களும் எனக் கூறி பிள்ளையானை ஓரங்கட்ட முயற்சிக்கிறார்கள். இது அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலையினையே எடுத்துக்காட்டுகின்றது.

எனவே வடக்கு மக்களின் விருப்பு வெறுப்புக்கும் அவர்களுடைய அரசியல் இருப்புக்கும் கிழக்கு மக்கள் பலியாகிக் கொண்டிருப்பது எந்தவகையிலும் நீதியானது அல்ல. எனவே கிழக்கு மக்கள் தங்களுக்கான ஒரு மாற்று அரசியல் தலைமையைத் தேடுகிறார்கள். இந்தத் தேடுதல் வடக்கிற்கு எதிரானதாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதில்லை. உண்மையில் கிழக்கு பலமாக இருக்கும் போதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் சுயநிர்ணயம் பாதுகாப்பானதாக அமையும் என்பதை பிரதேசவாதச் சாயம் பூசுபவர்களும் தமிழ்த் தேசியம் பேசுபவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். 'வெறுங்கையில் முழம் போடமுடியாது' என்பார்கள் அது போல் தற்போது அந்த மாற்றுத் தலைமையாக பிள்ளையானை எடுத்துக்கொள்கின்றார்கள் அதன் வெளிப்பாடே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அவருக்குக் கிடைத்த மக்கள் ஆதரவாகும். இந்த ஆதரவும் வளர்ச்சியும் பிள்ளையானை பிள்ளையாராக ஆக்கி பூசிக்கப்பட வேண்டியவ ஒருவராக உருவாக்காமல் விமர்சனத்துக்கும் மாற்றத்துக்கும் உரிய தலைவராக பிள்ளையானை எடுத்துக்கொள்வதே இன்றைய கிழக்கின் தேவையாகும்.

தொடர்ச்சி...

## பழம் ஏடு படிக்க ஆள் இல்லை

காட்டியுள்ளதுடன், அவற்றினை தற்கால எழுத்திலும் கொப்பிகளில் எழுதியும் கையளித்துள்ளாதாக கூறகின்றார்.

1962ம் ஆண்டில் இருந்தே வாசிக்கப்பழகி கொண்டதாக கூறும் இவர், ஏடுகள் பல கறையான்கள் உண்டு அழிந்துவிட்டதாக கூறி கவலையுமடைந்தார். இதேவேளை எம்மக்கள் மத்தியில் பொதிந்துள்ள ஏடுகளை எடுத்து வாசித்து அவற்றினை தற்காலத்தவர்களும் வாசித்து அறியக்கூடிய நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்றார். படுவான்கரைப்பிரதேசத்திலும் பல உள்ளூர்புலவர்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்களும் சமுகத்திற்கு வெளிக்காட்டப்படவேண்டியவர்களே.

தொடர்ச்சி...

## எறியப்படும் காலணியைப் பார்த்து...

மொத்த உள்நாட்டு உற்பத்தி மோசமாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. நாணய மாற்றுவிகிதங்கள் என்றுமில்லாதவாறு தளம்பல் நிலையைக் காண்பிக்கின்றன. சுற்றுலாப்பயணிகளின் கடந்த மாதத்துக்கான வருகை, 167 ஆயிரமாக வீழ்ச்சி கண்டிருக்கிறது. கடந்த ஆண்டோடு ஒப்பிடும் போது, சுமார் 13 ஆயிரம் பேர் குறைவு, மார்ச்சோடு ஒப்பிடும் போது, 80 ஆயிரம் பேர் குறைவு, இத்தனைக்கும் ஏப்ரலில் தான் இலங்கைக்கான சுற்றுலாப் பருவகாலம் ஆரம்பமாகின்றது. இதையெல்லாம் என்ன செய்து மீட்கப்போகிறோம்? எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதர் இன்னொரு மனிதர் மேல் கொள்ளும் மரியாதையையும் நம்பிக்கையையும் இழந்திருக்கிறோம். கடைகளுக்குச் செல்லும் போது இனத்தை, மதத்தை விசாரித்துப் போகும் இழிநிலை. தூரப்பயணங்களில் அருகில் அமர்ந்திருப்பவரை சந்தேகிக்கவேண்டிய நிலைமை. உதடுகள் புன்னகையை மறந்து நெடுங்காலமாகின்றது. பொருளாதாரத்தை தலைகீழாக நின்றாவது மீட்டுவிடலாம். இல்லாவிட்டால் இதுவரை இருந்தது போலவே, எப்படியோ மீளட்டும் என்று பாராமுகமாக இருந்துவிடலாம். ஆனால், இழந்த நம்பிக்கையைப் பெறுவது? இன்னொருவர் மீதான ஆதூரத்தையும் அன்பையும் பெற்றுக்கொள்வது? எத்தனையுகங்கள்வேண்டும்அதற்கு?

முடிவெடுக்கும் நிலையில் நீங்கள் இல்லாத நிலையில் இன்று நீங்கள் செய்யவேண்டியது ஒன்றே. பொறுமை காப்பது. பச்சையாகச் சொன்னால், "வாயை மூடிக்கொண்டு கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருங்கள்." தமிழ், சிங்களம், முஸ்லீம் என்று இல்லாமல், சைவன், பௌத்தன், இஸ்லாமியன், கிறிஸ்தவன் என்று இல்லாமல், உங்கள் ஒவ்வொருவரின் சிறு அசைவும், எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றும் வாய்ப்பை ஏற்படுத்தி விடக்கூடிய மிக மோசமான காலகட்டம் இது.

மிக முக்கியமாக சமூக வலைத்தளங்களைக் கைவிட்டு விடுங்கள். அது உங்கள் இரத்த அழுத்தத்தைத் தான் கூட்டப்போகிறது. இந்த நாட்களில் எந்த நல்ல விடயங்களுமே அங்கு பகிரப்படப்போவதில்லை. அப்படியே போனாலும், காலை வணக்கம் சொல்வது, நகைச்சுவையைப் பகிர்வது என்று அன்றாடத்தில் மட்டும் திளையுங்கள். "பொழுதுபோக்கத்தான் பேஸ்புக் போகிறேன்" என்று சொல்கிறீர்களென்றால், அத்தனையும் போதும் தானே?

தொடக்கத்தில் சொன்ன ஜபிலஸ் சப்பாத்து கதை போல, இந்த கொடூரமான நாட்கள் வெறும் செய்தியாக உங்களைக் கடந்து போகும் நாளொன்று வரும். அன்று நீங்கள்"அந்தக்கொடூரத்தில் என் சிறு பங்கு கூட இருக்கவில்லை" என்று திருப்தியுடன் புன்னகைக்க வேண்டும்.

அதுவரை எதுவுமே வேண்டாம். உண்மையிலேயே இந்த அமைதி உங்களை என்னவோ செய்கிறதென்றால், எப்படியாவது இதிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்று விரும்புகிறீர்களென்றால், தயைகூர்ந்து பல்லைக்கடித்துக் கொண்டு பொறுமையாக இருங்கள், அமைதியாக இருங்கள். இந்த நாட்டின் இன்னொரு குடிமகனாக நான் கேட்டுக்கொள்ளக்கூடியது அது ஒன்றே. ஆம். பூமி ஆள்பவர்கள் பொறுத்தவர்கள் மட்டுமே!

# AGNI PULAYAVELY INDUSTRIES

## அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

**சைவ முறையில் தயாரிக்கப்பட்டது**

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு





## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்

## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**

---

# FCC SUPER MALL

4 Wings for Uplift Your life

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

PHARMACY – TIP TOP HEALTH CARE

SUPER MARKET – FOURAMS CITY CENTRE

BUDGET SHOP – FOURAMS CASH & CARRY, Young Forever

CAFETERIA – FCC Cafe

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...

## Home & Office Delivery Service

### வீடுகளுக்கும் அலுவலகங்களுக்குமான இலவச விநியோக சேவை

உங்களுக்குத் தேவையான

- உணவுப் பொருட்கள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அழகு சாதனப் பொருட்கள்
- சிற்றூண்டி, பலூடா வகைகள்
- மருந்துப் பொருட்கள் (வைத்தியரின் சிட்டை அவசியம்)

அழையுங்கள்

உங்களின் நேரத்தை மீதப்படுத்த FCC Super Mall இன் மேலும் ஒரு வாடிக்கையாளர் சேவை

**065 22 22 221**

**065 22 22 722**

**077 20 72 722**

CALL / SMS / WHATSAPP YOUR REQUEST TO US




** நிபந்தனைக்குட்பட்டது
** Condition applies

Service Time : Morning 10.00 AM to Evening 04.00PM

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa